உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி	ருத்ரோத்காரி௵ பங்குனிமீ க௳	பகுதி
9	1924௵ மார்ச்சுமீ 13௳	9

கடவுள் வணக்கம்.

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாத வென்
கர்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்ம மொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழி யிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவக ரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (1)

என்னையுன்னை யின்னதிது வென்றுமை னிற்குநிலை
தன்னை யருளென்ற தருணத்தி — லன்னைபெற்ற
பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றிகண்டா யையனே
யுள்ளத்தி னுள்ளே யுணர். (2)

சொன்னவர்தா நிட்டை தொகுத்திரா நிட்டையிலே
மன்னினவர் போதியார் மாமௌனன் — றன்னுள்
விருப்பாகக் கைகாட்டி மிக்க வடநீழ
லிருப்பா னிருவிகற் பத்தே. (3)

அரும்பொருள் விளக்கம்.

1. கற்றும் அறிவில்லாத = கல்விகற்றும் நல்லறிவு பெறாத.
என் கர்மத்தை = என் கெட்ட கர்ம பலனை
மதியை = அறிவுவிளக்கம் பெறாத புத்தியை

கற்பதனால் அறிவு விளக்கம் பெறவேண்டும்: கற்றும் அறிவு விளக்கம் பெறாதவர்களைவிடக் கல்லாத பேர்களை நல்லவர்கள் என்றார். எவ்வாறெனின் கல்லாதவர்கள் நாம் கல்விகற்கவில்லை என்று தங்கள் நிலைமையை யுணர்ந்து கொஞ்சங் கற்றவர் முன்புகூட அடக்கமாய் ஒழுகுவார்கள். கற்றும் அறிவு விளக்கம் பெறாதோர்கள் நாம் கல்வி கற்றிருக்கிறோம் என்று அகங்காரமடைந்து தம்மைப் பிறர் மதிக்கவேண்டுமென்ற விருப்பங்கொண்டு வீண் குதர்க்கவாதம் செய்து தமது கொள்கையையே சாதித்து நிலைநாட்ட முயல்வார்கள். இத்தகையோர் எதிரியின் கொள்கையே சத்தியமான தென்றும், அவர் வாதமே நியாயமானதென்றும் தமக்குள் உணர்ந்தாலும், அதை மறுத்துத் தமது கொள்கையையே வாய் வல்லமையால் நிலைநாட்ட முயல்வார்கள். இவர்கள் ஒரு சமயம் தாங்களே நிலைநாட்டும் ஒரு சித்தாந்தத்தை மற்றொரு சமயத்தில் தாங்களே மறுத்துக் கண்டித்து மாறான ஒரு சித்தாந்தத்தைத் தாபிப்பார்கள். இவர்கள் ஒருபோதும் மெய்யறிவை யடைவதில்லை. இத்தகையோர் நடக்கையையே பின்னால் விவரித்துக் கூறி யருளினார்.

கைவல்ய ஞான நீதி நல்லோருரைக்கிலோ = பெரியோர்கள் ஞானமே மோக்ஷத்தை யளிப்பது என்று கூறினால்

கர்மம் முக்கியமென்று நாட்டுவேன் = அப்படியல்ல, கர்மமே மோக்ஷத்தை யளிப்பது என்று சாதிப்பேன்.

கர்மம் ஒருவன் நாட்டினாலோ = (அப்படிக்கின்றி) ஒருவர் கர்மமே மோக்ஷத்தை யளிப்பது என்று நிரூபித்துக் காட்டினால்.

பழைய ஞானம் முக்கியமென்று நவிலுவேன் = முன்பு மறுத்துக்கூறிய அதே ஞானந்தான் மோக்ஷத்திற்கு முக்கிய சாதனமென்று வாதிப்பேன்.

வடமொழியிலே வல்லான் ஒருவன் வரவும் = சம்ஸ்கிருத பாஷையில் பாண்டித்ய முடைய ஒருவன் வந்தால்.

திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன் = தமிழில் பாண்டித்ய முடையவன்போல் பேசுவேன்.

வல்லதமிழ் அறிஞர்வரின் = தமிழ்க் கல்வியுடைய அறிவாளி வந்தால்.

அங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன் = (நான் சம்ஸ்கிருதம் கற்றவன் என்று காட்டிக்கொள்வதற்காக) அப்போது சம்ஸ்கிருத மொழிகளில் சிலவற்றை வெளியிடுவேன்.

இத்தகைய நடக்கைகளெல்லாம் "அப்பா இவன் பிரமாத கல்விமான். இவனிடம் வாதம் செய்ய யார்தரம்" என்று கருதும்படி உலகினரை மிரட்ட உதவுமேயன்றி இத்தகைய கல்வி யொருபோதும் மோக்ஷத்தை யளிக்காது. அறிவு விளக்கம் பெறக் கற்கும் கல்வியே மோக்ஷத்தை யளிக்கும் என்று அருளினர்.

2. என்னை உன்னை, இன்னது இது என்னுமல் நிற்கும் நிலை = நான் நீ என்ற தன்மை முன்னிலை யற்றதும், (இது இன்ன வஸ்து, இன்ன காலம், இன்ன இடம் என்றுணர்வதாகிய) காலதேசவஸ்து பரிச்சேதமற்றதுமாகிய (பிரம்ம சாட்சாத்கார) நிலை.

அருள் என்ற தருணத்தில் = அந்த மோன நிஷ்டையாகிய நிலை நமக்கு அருளப்படும் சமயத்தில்

அன்னைபெற்ற பிள்ளைக்கும் சொல்லாதபெற்றி = தாயார் தான்பெற்ற பிள்ளைக்குக்கூட வாயாற் சொல்லமுடியாத தன்மையானது (அந்த நிலை.)

(அப்படியாயின் அதை யெப்படி யறிவதெனின்.)

உள்ளத்தினுள்ளே யுணர் = (ஊமைகண்ட கனவு போல் உன் உள்ளத்தில் நீ யுணரத்தக்கதே யன்றி வாயால் கூறத்தக்கதல்ல.

(பின் வெண்பாவில் அந்த நிட்டானுபவம் வாயாற் கூறத்தக்கதல்ல வென்பதைத் திருட்டாந்த பூர்வகமாய்க் கூறுகிறார்.)

3 சொன்னவர் = அந்த நிட்டானுபவம் இத்தகையதென வாய்விட்டுக் கூறியவர்.

நிட்டை தொகுத்திரார் = (மெய்யான) நிட்டையைப் பொருந்தியிருக்க மாட்டார்கள்.

நிட்டையிலே மன்னினவர் = அந்நிட்டையை யுள்ளபடி யனுபவித்தவர்கள்.

போதியார் = அது இத்தகைய நிலை யென்று வாயாற் கூறமாட்டார்கள்.

மாமௌனன் = மௌன குருவாகிய தக்ஷிணாமூர்த்தி.

விருப்பாகக் கைகாட்டி = (ஜனகாதியர்க்கு) அன்போடு சின்முத்திரைக் கரத்தைக் காட்டி.

வடநீழல் = வடவால விருக்ஷத்தின் கீழ்.

தன்னுள் இருப்பான் நிருவிகற்பத்தே = தனக்குள்ளாகவே நிருவிகற்ப நிட்டையில் அமர்ந்திருப்பான்.

பரமசிவன் ஜனகாதியர்க்குச் சமாதி நிலையை வாக்கால் கூறுமல் குறிப்பாகச் சின்முத்திரையாற் காட்டித் தாம் அச் சமாதி நிலையில் அமர்ந்தது ஈண்டு திருட்டாந்தமாகக் கூறப்பட்டது.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரிஸூ பங்குனிமீ கக

நமது புத்தி.

அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய ஆண்டவன் அநாதி மலத்தில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் மல நீக்கம் பெற்று நித்தியானந்த நிலையாகிய தம்மை வந்தடையும் வண்ணம் அருள் நோக்கங்கொண்டு அவற்றிற்கு தநு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை யளித்தார்.

இவற்றில் தநு என்பது தேகம்; கரணம் என்பது அந்தக் கரணங்கள்; புவனம் என்பது உலகம்; போகம் என்பது இவ்வுலகில் சீவன்களின் போகானுபவத்திற்கு அவசியமான பொருள்கள். இவற்றுள் கரணங்கள் முக்கியமானவை. தேகத்தோடு சேர்ந்த இவைகளே சீவன் தன் மலம் அல்லது அஞ்ஞானத்தை நீக்கிக்கொண்டு நித்தியானந்தமாகிய முத்திவீட்டை யடைவதற்கு முக்கிய சாதனமாயுள்ளவை. நாம் எடுத்துக்கொண்ட புத்தி என்பது இந்த அந்தக்கரணங்களில் ஒன்ருக இருப்பதால் அவற்றைப் பற்றிமட்டும் சுருக்கமாய்க் கூறுவாம்.

அந்தக்கரணங்கள், 1 மனம், 2 புத்தி, 3 சித்தம், 4 அகங்காரம், 5 உள்ளம், என ஐந்தாம். இவை சூக்கும பஞ்சபூதங்களின் சத்துவகுண சமஷ்டியில் (சமஷ்டி = ஐந்தும் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்தது) உற்பத்தியாயின. அதனால் இவை தனித்தனியா யிராமல் ஒன்றுபோலவே காணப்படும். ஆயினும் ஐந்து பூதங்களின் குணபேதங்களால், அந்தந்த பூதங்களின் இயற்கைக்குத் தக்கபடி ஐந்து குணங்களை யுடையதாய், ஐந்து தொழில்களை யுடையதாய் இருக்கின்றது. அவ்வாறே ஐந்து நாமங்கள் அமைந்திருக்கின்றன.

இவற்றில் (1) மனம் வாயுவின் அம்சமாதலின் வாயுவைப் போல் சதா சலித்துக்கொண்டே யிருக்கும். (2) சித்தம் அப்பு

வின் அம்சமானதால் சலம் ஒரு அணுவிலிருந்து மற்றொரு அணுவைப்பற்றி ஊறிச் செல்வதுபோல் விஷயங்களைத் தொடர்ந்து பற்றிச் செல்லும். (3) அகங்காரம் பிருதிவியின் அம்சமானதால் அதன் குணமாகிய கடின குணமுடையதாய், நான் என்று தடித்து நிற்கும். (4) உள்ளம், ஆகாயத்தி னம்சமானதால், ஆகாயம் மற்ற நான்கு பூதங்களுக்கும் இடங்கொடுத்துத் தான் சலனமின்றி களங்கமற்றிருப்பதுபோல், மற்ற நான்கு கரணங்களுக்கும் இடமளித்துத் தான் சலனமின்றி யிருக்கும்.

இனி நாம் எடுத்துக்கொண்ட (5) புத்தி என்பது அக்னியின் அம்சம். பிரகாசத்தை யளித்து இது இன்ன வஸ்து இது இன்ன வஸ்து என்று விளக்கிக்காட்டுவதே அக்கினியின் தொழில். அது போன்றே புத்தி விஷயாதிகளின் உயர்வு தாழ்வு நன்மை தீமை யாதிகளை நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

அறிவு வேறு புத்தி வேறு. அறிவு என்பதும் உள்ளம் என்பதும் மனச்சாக்ஷி யென்பதும் ஒன்றே. அறிவு சலனமற்றிருப்பது. அதுவே உள்ளம். மனம் முதலியவற்றின் தொழில்கள் அறிவின் சந்நிதானத்திலேயே நடைபெறவேண்டும். அவற்றின் இருப்பிற்கு வேறு இடமில்லை. மற்ற நான்கு கரணங்களுக்கும் உள்ளமே இடங்கொடுத்திருப்பதால் இவ்வாறு தன் சந்நிதியில் நடக்கும் தொழில்களனைத்தையும் அறிவு பார்த்துக்கொண்டிருப்பதால் அது சாக்ஷியாயிற்று. அது பாரபட்சமற்றது. மனதின் தொழில்களில் இது நல்லது இது கெட்டது என்று உணர்த்தும் சக்தி வாய்ந்தது. அதனாலேயே அது பகுத்தறிவு என்றும் கூறப்பட்டது.

இந்த அறிவு ஆறறிவுடைய மக்களனைவர்க்கும் உண்டு. சதா கொடிய பாபங்களையே செய்துகொண்டிருக்கும் பரம துஷ்டனுக்கும் தான் செய்தது பாபம், கெட்ட செய்கை என்று அவன் மனதிற்குள் ஒரு உணர்ச்சி யுண்டாகவே யுண்டாகும். அறிவில்லாதவன் எவனுமில்லை. ஆனால் அறிவு கூறுவதை யவமதித்து தன் மனப்போக்கின்படி செல்கிற ஒருவனையே அறிவில்லாதவன், அறிவுகெட்டவன் என்கிறோம்.

இந்த அறிவே தன் பூரணப் பிரகாசத்தைப் பெறும்போது, அதாவது தன் சாக்ஷாத்கார நிலையை யடையும்போது ஞானம்

எனப்படுகிறது. ஆதலின் ஞானமில்லாதவரும் ஒருவருமில்லை. சாமானிய ஞானம் யாவர்க்கும் உண்டு. தேகத்திற்குள் நான் என்ற ஒன்று இருக்கிறதென்பதையும், கடவுள் என்ற ஒன்று இருக்கிறதென்பதையும் உணர்வதே ஞானம் இருப்பதன் அடையாளமாம். இதுவே சாமானிய ஞானம். இந்த ஞானம் அஞ்ஞானத்தை யழிக்கக்கூடியதல்ல. அதற்கு மாறாக அதோடு கலந்தே யிருக்கும். ஆனால் இதுவே விர்த்தியடைந்தபோது அஞ்ஞானத்தை யழிக்கும். அப்போதுதான் ஞானம் உதயமாயிற்று என்கிறோம். இவற்றைப்பற்றி ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இனிப் புத்தியின் தொழிலைக் கவனிப்போம். புத்தி பிரகாசமுடையதென்றும் விஷயங்களை விளக்கிக் காட்டுவதென்றும் முன்னம் கூறினோம். ஆகையால் நமது செய்கை ஒவ்வொன்றிலும் புத்தி நமக்கு உதவி செய்யக்கூடியது என்று உணருகிறோம். நாம் ஒரு காரியத்தைச் செய்யக் கருதும்போதே புத்தியைக் கொண்டு ஊகித்தால் அக்காரியத்தால் நன்மை யுண்டாகும், தீமையுண்டாகும், கௌரவம் நேரிடும், அகௌரவம் நேரிடும், இவ்வழிசெய்தால் இப்பலன் உண்டாகும் என்று புத்தி விளக்கிக் காட்டும்.

ஒருவன் நடு இரவு பணமூட்டை யெடுத்துக்கொண்டு ஒரு ஊருக்கு செல்கிறான். காட்டுவழி செல்லவேண்டும். அப்போது புத்தியைக் கேட்டால் என்ன சொல்கிறது ?

"அய்யோ காட்டுவழி சென்றால் கள்ளர் உன்னைக் கொன்று பணத்தை யெடுத்துக்கொள்வார்கள். அதோடு காட்டு மிருகங்கள் உன்னைக்கண்டால் கொன்று தின்றுவிடும். மேலும் இருட்டில் வழிதவறிவிட்டால் பெரிய ஆபத்திற்குள்ளாவாய். பக்கத்துக் கிராமத்திற்குச்சென்று படுத்திருந்து காலையில் புறப்பட்டுப்போ" என்று கூறுகிறது. அது கூறுகிறபடி கேட்டால் நன்மை யடைகிறோம் இதுதான் புத்தியின் தொழில்.

ஒருவன் உன்னிடம் வந்து "நண்பா! ஒரு இடத்தில் சூதாடுகிறார்கள். பத்து ரூபாய் மட்டும் எடுத்துக்கொண்டு சென்றால் இரவிற்குள் நானூறு ஐந்நூறு சம்பாதித்து வரலாம்" என்று கூறுகிறான். அச்சமயம் புத்தியோடு ஆலோசித்தால், புத்தி "பணம் வருவது நிச்சயமல்ல. நம்மிடமுள்ளது போய்விட்டால் துக்கம்.

மேலும் எந்த சமயத்திலும் போலீஸார் வந்து பிடித்துக்கொள்ளலாகும். அதோடு நம் குடும்ப மானமே போய்விடும். தண்டனையடைவோம்'' என்று கூறுகிறது.

இத்தகைய சமயங்களில் நாம் புத்தி கூறுகிறபடி நடந்துகொண்டால் "இவன் புத்திசாலி" என்று அழைக்கப்படுகிறோம். அப்படிக்கின்றி புத்தியை யலட்சியம் செய்துவிட்டு மனத்தூண்டுதலின்படி நடந்து துன்பத்திற்குள்ளாயின் "இவன் புத்திகெட்டவன்", "அவன் சொன்னால் இவனுக்குப் புத்தி எங்கு போயிற்று?" என்று தூஷிக்கப்படுகிறோம். "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவ மென்ப திழுக்கு" என்று பொய்யாமொழியார் அருளியது, நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு முன்பே இதைச் செய்தால் பின்னால் இதனால் எத்தகைய பயனுண்டாகும் என்பதைப் புத்தியைக்கொண்டு ஆலோசித்தபிறகே செய்ய வேண்டும் என்பதற்காகவே.

அப்படியிருக்க அனேகர் புத்தியை யலட்சியம் செய்துவிட்டுத் தம் மனம்போனவழி செல்வானேன்? கோபம் அல்லது ஆசை யிவற்றால் தூண்டப்பட்டவர்கள் புத்தியைக் கவனியாமலே மனம்போனபடி நடக்கிறார்கள். புத்தியாகிய தீபவொளியில் அறிவாகிய கண்ணை யூன்றி நோக்கினால் விஷயங்களின் பலாபலன்கள் புலப்பட்டே தீரும். ஆண்டவன் கிருபையோடு இக்கருவிகளை நமக்களித்திருக்க நாம் அவற்றை யுபயோகியாது மாயா சம்பந்த ஆசை முதலியவற்றால் மயக்கப்பட்டு அவற்றின் வழி யுழன்று அல்லற்படுவது நமது குற்றமேயாகும். எந்த நாட்டார் எதையும் புத்தியைக்கொண்டு சிந்தித்துச் செய்கிறார்களோ அவர்கள் மேலான நிலைமை யடைகிறார்கள்.

இப்போது நாம் (நம்மில் பெரும்பாலார்)எவ்வாறு புத்தியை யுபயோகிக்கிறோம் என்பதைப்பற்றி இரண்டொரு திருட்டாந்தங்களைமட்டும் கூறிவிட்டு இதை முடிக்கிறோம்.

1. பத்திரிகைகளை வாசிப்பதில் புத்தியை யுபயோகிக்கிறோமா ?

பத்திரிகைகளை யேன் வாசிக்கவேண்டும் ? அதனால் என்ன பயன்? பத்திரிகைகளை வாசித்தால் நாம் கண்டும் கேட்டு மிராத பல அரிய விஷயங்களை யறிகிறோம். நாம் க்ஷேமமடைவதற்கு—

நமது முன்னேற்றத்திற்கு—நாம் என்ன செய்யவேண்டும் என்ற அரிய வழிகளையும் புத்திமதிகளையும் ஆன்றோர் பத்திரிகைகளின் வாயிலாக நமக்குப்போதிக்கிறார்கள். நாம் அவற்றை வாசித்தறிந்து அவ்வாறு நடந்தால் கட்டாயம் முன்னேற்றமடையலாம். இவ்வளவு விஷயமும் புத்தியால் நாம் அறியக்கிடக்கிறது. அவ்வழியே நடக்கும் நாட்டினர்களெல்லாம் மேலோங்கி க்ஷேமமும் பலமும் பொருந்திய நிலைமையி லிருக்கிறார்கள். நாமோ புத்தியை யுபயோகித்து அவ்வழி நடக்காததால் எல்லா நாட்டாரினும் இழிவான நிலைமையி லிருக்கிறோம்.

2. நேராய் நமது சொந்த நன்மையை யுண்டாக்கும் விஷயத்திலேனும் நாம் புத்தியை யுபயோகிக்கிறோமா? நாம் உடுத்திக் கொள்ளும் உடைகளை நாமே நூல் நூற்று நெய்து உடுத்துக் கொண்டால் நாம் நமது தரித்திரம் நீங்கி க்ஷேமப்படுவோம். நாம் மட்டுமல்ல, நமது தாய்நாடே முன்னேற்றமடையும் என்று நம் நாட்டு அறிவாளிகள் சதா நமக்குப் போதித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் நமது உடைக்கே அன்னியநாட்டை யெதிர்பார்த்திருப்பதால் எவ்வளவோ தீமை யிருக்கிறதென்றும், நாமே உற்பத்தி செய்து கொண்டால் மிக்க நன்மை யுண்டாகுமென்றும் புத்தி நன்றாய் நமக்கு அறிவிக்கிறது. ஆனால் நாம் அதன்படி நடக்கிறோமா? அந்தோ! இல்லையே.

பொதுநலத் தொழிலிலாவது நாம் புத்தியை யுபயோகிக்கிறோமா? நாம் மந்திராலோசனைச் சபைகளில் அவயவிகளாயிருக்கிறோம். ஒரு சமயத்தில் இரண்டு பிரேரேபனைகள் கொண்டுவரப்படுகின்றன. 1. ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள உபாத்திமார்களுக்குச் சம்பளத்தை யுயர்த்த வேண்டும். 2. ஐந்நூறு ரூபாய்ச் சம்பளம்பெறும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு இப்போதிருக்கும் தினப்படி ஐந்து ரூபாயைப் பத்து ரூபா யாக்கவேண்டும்.

இந்த இரண்டு பிரேரேபனைகளில் எதை யங்கீகரிக்கவேண்டும்? என்று புத்தியைக்கொண்டு சிந்தித்தால், புத்தி பின்வருமாறு கூறுகிறது. "ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் சம்பளமும் படியும் இப்போதிருப்பதே யதிகம். அதே வேலையில் ஒரு இந்தியனை வைத்தால் அச்சம்பளத்திலும் படியிலும் பாதிகொடுத்தால் போதும். தகுதியுடைய இந்தியர்

இல்லாமலில்லை. ஆரம்ப ஆசிரியர்க்கோ கொடுக்கப்படும் சம்பளம் சாப்பாட்டிற்கே போதாது. அவர்கள் மனோ நிம்மதியும், உற்சாகமும் சற்றுமில்லாத நிலைமையி லிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் எப்படிச் சரியாகத் தம் கடமையைச் செலுத்துவார்கள். உபாத்திமைத் தொழிலோ யாவற்றிலும் கஷ்டமானது. மனப்பூர்வமாய் அத்தொழிலைச் செய்வது யோகசாதனையிலும் கடினம் எனலாம். அவர்களே மற்ற எல்லா தொழிலாளிகளைவிடவும் மிகக் குறைந்த சம்பளம் அளிக்கப்படுகிறார்கள். நம்மக்களுக்கு ஆரம்பக் கல்வியே பிரதானமானது. அது திருப்தியாய் நடைபெறவேண்டுமாயின் அந்த ஆசிரியர்களின் குறைகள் நீக்கப்படவேண்டும்.''

புத்தி யிவ்வாறு கூறுவதை நாம் லட்சியம் செய்கிறோமா? இல்லை. நமது பதவி அதிகாரிகளால் நமக்களிக்கப்பட்டதாகவும், அவர்களுக்குத் திருப்தியாய் நடந்துகொண்டால்தான் நமக்குக் கௌரவம் கிடைக்குமென்றும், அவர்கள் தயவு பெற்றால் செல்வாக்கும் கௌரவப்பட்டமும் பெறலாமென்றும் கருதி "ஆரம்ப ஆசிரியர் விஷயத்தைப்பற்றி பின்னால் சிந்திக்கலாம். ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் கோரிக்கையை யுடனே நிறைவேற்ற வேண்டும்'' என்ற கட்சியில் சேர்ந்து கொள்கிறோம்.

விளக்கிருந்தும் நாம் கண்களை மூடிக்கொண்டால் விளக்கால் என்ன பயனடைவோம். அதுபோல் நம் தாய்நாட்டின் நன்மையை, நமது சந்ததியாரின் க்ஷேமத்தை, நமது சகோதரர்களின் கஷ்ட நிலைமையொழிவதைக் கருத்தில் வைத்து நடவாமல், அற்பமான சுயநல நோக்கங்கொண்டு, புத்தியைப் புறக்கணித்து நடக்கிறவரையில் நாம் ஒருபோதும் நன்மை யடையோம். கருணாநிதியாகிய பரம்பொருள் நாம் நம் புத்தி யறிவிக்கிறபடி நேர் வழியில் நடந்துகொள்ளுமாறு அருள்புரியவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் சத்.

ஆரிய சித்தாந்தம்.

(குரு.)

(304-ம் பக்கத் தொடர்ச்சி.)

குரு பக்தி செய்கிற புண்ணிய புருஷர்கள் மாதா பிதாக்களையுங் குருவாகக்கருதிப் பக்தி செய்யவேண்டும். இவ்விருவருள் மாதாவை யதிக உயர்வென்று நூல்கள் புகழ்கின்றன. ஜீவான்மாக்கள் அறிவித்தா லறியு

மியல்புள்ளனவென்று முன்னர்க் கூறினோம். தாமே யறியச் சக்தி யில்லா தவையேயாம். தந்தையிடமிருந்து ஜீவ சொரூபமே கருப்பாசயத்திற் பதிவது. அது தாயின் உதிராம்சத்தைக் கிரகித்து விருத்தியடைகின்றது. ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி யென்னும் மூன்றவஸ்தைகளுள் ஜாக்கிரமே சிறப்புடையது. ஏனெனில் ஜாக்கிராவஸ்தையிலிருந்துதான் சகல ஞானங்களையும் பெறவேண்டும். அதற்கு மனமாதி கருவி கரணங்கள் தாயினிடத்தி லிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றன. பூமியிற் பிறந்து சிசுக்களா யிருக்கும்போதும் தாய்ப்பால் குடிப்பதனாலேயே சரீரம் விருத்தியடைவது பிரத்தியட்சம். இவ்வாறு கருவிகளெல்லாங் கொடுத்தருளிய தாயே உலக அறிவையும் புகட்டுகின்றாள்.

"அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்ற உபதேசத்திற் கூறப்பட்ட இருதெய்வங்களுள் தாயே முதல் தெய்வமும் குருவுமாவாள். குருவானவர் தமது சிஷ்யனுக்குக் காட்டுவதுபோலத் தாயே, தன் குழந்தைக்கு அதன் தந்தையாகிய தெய்வத்தைக் காட்டுகின்றாள். "அப்பா" என்று அழைக்கக் கற்றுக்கொடுக்கின்றாள். சாதம் பால் முதலியவற்றின் பேர் சொல்லி அப்பொருள்களைத் தெரிவிக்கின்றாள். பரம்பொருள் உண்டென்பதைத் தாயே குழந்தைக்குத் தெரிவிக்கின்றாள். சுவாமியைக் கும்பிடவும் தொழவுங் கற்றுக்கொடுக்கின்றாள். பாவபுண்ணியங்களுண்டென்று அறிவிக்கின்றாள். பாவத்தொழிலைச் செய்யவொட்டாமல் தடுக்கின்றாள். புண்ணிய செய்கைகளைத் தெரிவித்து அவற்றைச் செய்யக்கற்பிக்கின்றாள். சரீர போஷணைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் பெயர்களோடு தெரிவித்து உபயோகப்படுத்தவும் போதிக்கின்றாள். தேவாராதனை செய்யப்படும் விசேஷ தினங்களில் ஸ்நானஞ் செய்து சுத்த வஸ்திரந் தரித்துப் பரிசுத்தரா யிருக்கும்படி போதிக்கின்றாள். ஐந்து வயதாவற்குள் ஒரு குழந்தைக்கு உலக வாழ்க்கைக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுந் தாயின் உபதேசமேயாகும். இந்த உபதேசத்தினால் குழந்தைகள் பிறர் சொல்வதைத் தெரிந்துகொள்ளவும்,தம் கருத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கவும் அறிந்துகொண்டு சிறப்படைகின்றன. அதற்குமேல் தந்தை கல்வி போதிக்கத் தொடங்குகிறான். தாயி னுபதேசத்தினால் பிறர் கூறுவதை யறிந்து கொள்ளச் சக்திபெற்ற குழந்தை கல்வியிற் சிறப்படைகின்றது. இக்காரணங்களால் சகல அறிவிற்கும் தாயே காரணமாகிறாள். இதனால் தான் "ஈன்றாளி லென்ன கடவுளுமில்" என்று பெரியோர் கூறியருளினார்கள். இவற்றால் தாயே மேலான தெய்வமும் குருவுமா யிருக்கிறாளென்று வேதாதி நூல்கள் கூறுகின்றன.

இதனாலேதான் தந்தையைவிடத் தாய் சிறந்தவளென்று கூறுகிறார்கள். தாய் பாபியானாலும் அவளை நிந்திக்கப்படாது என்கிற விதியுமுண்டு. புத்திரன் சந்நியாசியாக இருக்கிறான். அவன் தகப்பன் அந்தச் சந்நியாசியான புத்திரனை வணங்கவேண்டும். சந்நியாசம் பெற்ற புத்திரன்

தாயையே வணங்கவேண்டும். இதனால் தாயின் சிறப்பு மிகப் பெரிது என்றறியலாம். "அன்னை பிதா" என்று கூறுவதுபோல ஸம்ஸ்கிருதத்திலும் "மாதாபிதா" வென்றே தாயை முன்வைத்துக் கூறப்படுகின்றது. இதனால் தாயே சிறந்த தெய்வமும் குருவுமாமென்று அறிவுள்ளவர்கள் அறிந்துகொள்வார்கள்.

கல்வியைத் தானே போதித்து வேதாதி கலைகளையும் முறைப்படி உபதேசித்தால் அந்தப் பிதாவும் சிறந்த குரு தெய்வமாகவே மதிக்கப்படுகிறான். பிதாவை விடக் கல்வி போதித்தவன் சிறந்தவன். அவனை விட வேதாதிகலைகளை யோதுவித்தவன் சிறந்தவன். அவனைவிட மந்திரம் முதலிய வுபதேசித்துத் தேவாராதனை செய்யக் கற்பித்தவன் சிறந்தவன். பிரம ஞானோபதேசம் செய்து பிரமத்தை யறிவிப்பவன் எல்லாரையும் விடச் சிறந்தவன். தந்தை சரீரத்தை மாத்திரம் கொடுக்கிறான். ஞானோபதேச குருவோ ஜனனமரணங்களற்ற நித்தியானந்த பேரின்ப மோட்சத்தை யளிக்கிறான். ஆதலால் ஞானோபதேச குருவை யெல்லாரினு மேலானவனென்று நூல்கள் கூறுகின்றன. பிரமஞானம் பெற்றவனையினும் முதற்றெய்வங்களாகிற மாதா பிதாக்களை அலட்சியம் செய்யக் கூடாது.

முற்காலத்தில் தர்ம சந்தான விருத்தியைக் குறித்தே விவாகம் செய்யப்பட்டது. அதனால் அந்த மாதாபிதாக்கள் தர்ம சந்தானத்தையுற்பத்தியாக்கித் தர்மாபி விருத்தி செய்தார்கள். அதனால் புத்திரர்களைச் சதாசாரத்தில் பிரவிருத்தி யுள்ளவர்களாக நடத்தி வந்தார்கள். மாதாபிதாக்களுக்கு அபரக்கிரியை செய்வதே புத்திரர்களுக்குச் சிறந்த தர்மமாகக் கருதப்பட்டது. அது மாதுர் யக்ஞம், பிதுர் யக்ஞமென்று நூல்களாற் புகழ்ந்து கூறப்பட்டது. மாதாபிதாக்களைப் போஷிப்பதே புத்திரர்களுக்குச் சிறந்த தர்மமா மென்பர் பெரியோர். இல்லறத்திலோ அதற்கு மாறாகத் தன் சுகத்தைக் கருதியே விவாகம் நடத்தப்படுகிறது. தர்மாபி விருத்திக்காகப் புத்திரர்களைப் பெறுவதென்பதில்லை. தமது வயோதிக காலத்தில் தம்மைப் போஷிப்பதற்காகவே புத்திரர்களை விரும்புகிறார்கள். எந்த வழியிலாவது பணம் சம்பாதிப்பவனே சிறந்த புத்திரனாகப் புகழப் படுகிறான். கல்வியும் ஞானமுமுள்ள புத்திரன் பெருமை பெறுவதில்லை. இதனாலும் வேறு காரணங்களாலும் அதிதி பூஜையாதி பஞ்சமகா யக்ஞங்களும் மறக்கப்பட்டன. காசு சம்பாதிப்பதையே முக்கியப் பொருளாகக் கொண்டு புத்திரர்களைப் படிப்பிப்பதினால் சமயநூலுணர்ச்சி மறைந்தே போய்விட்டது. தெய்வமுண்டென்பது சந்தேகமே; அதைக் கவனிப்பாரில்லை. தெய்வ சிந்தனை குறைந்ததனால் தர்மசிந்தை குறைந்துபோயிற்று.

தெய்வநிச்சயமும் தர்ம சிந்தனையுங் குறையவே பஞ்சமும் தரித்திரமும் பரவின. அது காரணமாகவே பலவகையான நூதன நோய்கள் உற்பத்தியாகின்றன. வானம் மழை பொழிதலை மறந்தது. அகால மழை

பெய்து பயிரை யழிக்கின்றது. காலமழை யில்லை. சூரியன் காய்ந்து கொல்கிறான்.

இனியாவது பிரஜைகள் தமது புத்திரர்களுக்கு மத நூல்களைப் போதித்துத் தெய்வ ஞானமும் தர்மசிந்தையு முண்டாகும்படி செய்வார்களாயின் ஈடேறுவார்கள். பிராமணர்களிற் பலர் சுஜாதி தர்மத்தைக் கவனிப்பதில்லை. முன்பு அவர்களாலேயே உலகம் நடைபெற்று வந்தது. பிராமணர்கள் தமது குலாசாரந் தவறாமல் நடப்பதற்காகவே பலவகையான ஆபத்தர்மங்கள் நூல்களால் விதிக்கப்பட்டுள்ளன. சமைய நூல்கள் போதிக்கப்பட்டால் அவர்கள் ஆபத்தர்மங்களை யுணர்ந்து, தமது குலாசார ஒழுக்கம் கெடாமலிருந்து, தர்மத்தையும் செய்வார்கள். பிராமணர்களுடைய தவறுதலாலேயே ஏனைய வருணத்தாரும் நெறிகடந்து நடக்க நேரிட்டது. பூசுரர்களென்று நூல்களாற் புகழப்பட்டு யாவருக்கும் நன்மார்க்கத்தை யுபதேசித்துக் குருமார்களென்று சிறந்து விளங்கின பிராமணர்கள் இப்பொழுது தாங்களிருக்கும் நிலைமையை யோசித்து, முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்ட சன்மார்க்கத்தைக் கைக்கொண்டு நடக்க முயல்வார்களானால் அப்பொழுதே பரத கண்டத்துக்கு க்ஷேமம் பிறந்ததென்னலாம். முற்றிற்று.

சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

இந்தியாவின் சாயத் தொழில்.

பண்டைய காலத்தில் நம் இந்திய நாட்டினர் பற்பல கைத்தொழில்களில் பிரபலத் தேர்ச்சி யடைந்திருந்தனர். இந்திய சில்பிகள், கம்மாளர், சேணியர், இரஜகர் முதலிய தொழிலாளிகளின் திறமையைக் கண்டு பிரமை கொண்டு அவர்களைப் புகழாத தேசத்தார் கிழக்கில் சீன நாட்டிலிருந்து மேற்கில் இங்கிலாந்து வரையில் ஒருவரேனுமில்லை. அவர்களால் செய்யப்பட்ட வஸ்துக்கள் அக்காலத்தில் இந்தியாவுடன் வியாபாரம் செய்துவந்த எல்லா நாடுகளிலும் நன்கு மதிக்கப்பட்டு அதிக ஊதியத்துடன் விற்கப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுதோ காலவித்தியாசத்தினாலும் நம்முடைய மதியீனத்தினாலும் அக் கைத்தொழில்களில் அநேகம் சீர்குலைந்தும், அநேகம் க்ஷீணித்தும் போய்விட்டன. நம்நாட்டில் இவ்வாறு க்ஷீணதசை யடைந்திருக்கும் கைத்தொழில்களில் சாயத்தொழிலும் ஒன்று.

இவ்வுலகத்தில் தொன்றுதொட்டு கையாளப்பட்டுவரும் தொழில்களில் சாயம் தோய்க்கும் தொழிலும் ஒன்றென்று சொல்லலாம். உலகில் நாகரீகம் அதிகரிக்க அதிகரிக்க அநேக வஸ்துக்கள் தள்ளப்பட்டு வருகின்றன. அப்படித் தள்ளப்பட்ட வஸ்துகளுக்குப் பதிலாகப் புதியவையும் அவைகளைவிட உயர்ந்தவையுமான சாமான்கள் சில சமயங்களில் செய்து உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவ்வுலகில் நாகரீக

விருத்தியால் சாயங்களுக்கும் சாயம் தோய்க்கும் தொழிலுக்கும் இது வரையில் யாதொரு குறைவும் நேரிடவில்லை; இனிமேலும் நேரிடப் போகிறதுமில்லை. உலகமுள்ள பரியந்தம் சாயத்தொழில் மேன்மேலும் விர்த்தியாகிக்கொண்டே வருமென்று நாம் துணிபுடன் சொல்லலாம்.

ஜெர்மெனியர்கள் கலவைச் சாயங்களை (Synthetic dyes) செய்யத் தொடங்கியதற்கு முந்திய காலங்களில் நம் இந்தியாவில் செய்யப்பட்டு வந்த நீலசாயம் உலகமெங்கும் பிரசித்திபெற்றிருந்தது இது இந்திய இராஜாக்களுக்கு ஏராளமான இலாபத்தையும் கொடுத்துவந்தது. ஆனால் இந்தியாவில் இக்காலத்தில் இதன் நிலைமை மிகவும் விசனிக்கத்தக்கதே. சாயங்களைச் செய்வதும், அச்சாயங்களைத் துணிகளுக்குத் தோய்ப்பது மான தொழில் வெகு காலத்திற்குமுன் நம் இந்தியாவில் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டு, இந்நாட்டிலிருந்து சுமார் 2300-வருஷங்களுக்கு முன் மேல் நாடுகளுக்குப் பரவியதென்று தெரியவருகிறது மகா அலெக் ஸாண்டர் சக்ரவர்த்தி (Alexander the Great) என்னும் கிரேக்க தேசத்து அரசன் இந்தியாவிலிருந்து தன் தேசத்திற்குத் திரும்பிப் போகையில், சாயம் தோய்த்த பஞ்சு வஸ்திரங்களை மாதிரிக்காக இவ் விடத்திலிருந்து தன் நாட்டிற்குக் கொண்டுபோனதாகவும், அத்தேசத் தார் அவ்வஸ்திரங்களைக் கண்டதும் அவ்விதமானவைகளை உடுக்க அபே க்ஷித்து அது முதல் அம்மாதிரியான வஸ்திரங்களை இந்தியாவிலிருந்து தருவிக்கத் தொடங்கியதாகவும், அதன் பிறகு ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் இவ்விதத் துணிகளையும் இந்திய சாயங் களையும் வாங்கத் தொடங்கியதனால் இந்தியர்கள் அதுமுதல் அநேக நூற் றாண்டுகள் வரையில் இவ்வியாபாரத்தை மேல் நாட்டாருடன் செய்து மிகவும் இலாபமடைந்து வந்ததாகவும் தேசசரித்திரங்களின் மூலமாய் நமக்குத் தெரியவருகிறது.

அக்காலத்திய ஜனங்கள் இயற்கை சாயங்களோடு (with natural dyes) திருப்தி யடைந்திருந்தனர். ஆனால் இக்காலத்திய மனிதர்கள் ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சியடைய வடைய கலவைச்சாயங்கள் செய் யப் புகுந்தனர். இதனால் மேல்நாட்டுக் கலவைச் சாயத்திற்கும் நம் நாட்டு இயற்கைச் சாயத்திற்கும் போட்டி யுண்டாயிற்று. இந்தப் போட்டியில் மலிவான கலவைச்சாயமே ஜெயித்து விட்டது. அந்தோ, இயற்கை சாயங்களுக்கு பிறப்பிடமாயிருந்து, அவைகளை மேல் நாடுகளுக்கு ஏராள மாய் ஏற்றுமதி செய்துவந்த நம் நாடு நாளடைவில் இயற்கைச்சாயம் செய் யும் தொழிலைக் கைசோர விட்டுவிட்டு மேல் நாட்டிலிருந்து—முக்கியமாய் ஜெர்மெனியிலிருந்து கலவைச் சாயங்களை வாங்கி உபயோகித்து வரு கிறது. (இயற்கைச் சாயமானது கலவைச் சாயத்தைக் காட்டிலும் சற்று விலை யதிகமானதா யிருந்தபோதிலும் அதைவிட மிகவும் "கெட்டி யானது" என்பதில் சந்தேகமில்லை.)

இப்பரிதாப நிலைமையிலிருந்து நமக்கு விமோசனமில்லையா? என் இல்லை? நமது சாயத் தொழிலுக்கு நேர்ந்த விபத்துகளைப்போலவே நமது நெசவுத் தொழிலுக்கும் நேர்ந்தது. கையினால் செய்யப்பட்ட டக்கா (Dacca) மஸ்லின் முதலிய மிக்க நாணயமான வஸ்திரங்களுக்கு உலகெங்கும் பிரசித்தி பெற்றிருந்த நம் பொன்னாடு முரட்டுத் துணிகளையுங்கூட இங்கிலாந்திலிருந்து தற்காலத்தில் தருவித்து உபயோகிக்கும் நிலைமையில் இருக்கிறது. இந்நிலைமையிலிருந்து நாம் உயர்வடைய மகான்கள் இப்பொழுது நமக்கு விமோசனம் அளித்துக்கொண்டு வரவில்லையா? நம் நாட்டார் இப்பொழுது கதர் உடுக்க ஆரம்பித்திருப்பதினால் க்ஷீணதசையிலிருந்த நம்முடைய நெசவுத் தொழிலுக்கு பெருங்கிளர்ச்சி யுண்டாகவில்லையா? வெளிநாடுகளிலிருந்து நம் இந்திய நாட்டுக்கு வரும் துணி வகைகளின் தொகை இப்பொழுது வருஷத்திற்கு வருஷம் குறைந்து கொண்டே வரவில்லையா? இதுபோலவே இப்பொழுது கதர் அபிவிர்த்திக்காக தமது வாழ் நாட்களையும், சுகத்தையும், தியாகஞ் செய்துவரும் தேசாபிமானிகளும், நம் நாட்டு இராஜகர்களும் "கதருக்கும், நம் நாட்டில் சாயம் தோய்க்கப்படும் ஏனைய துணிகளுக்கும், கடவுளின் அநுக்கிரகத்தால், நம்மால் இயன்றவரையில் நம் நாட்டில் செய்யப்படும் இயற்கைச் சாயங்களையே உபயோகிப்போம்" என்று ஓர் பிரதிக்ஞை செய்து கொண்டு, அவ்வாறே நடந்துவந்தால் இன்னும் பத்து வருஷங்களுக்குள் நம் தேசத்து சாயத்தொழில் மிகவும் உன்னத பதவிக்கு வந்துவிடுமென்பதற்கு சற்றேனும் ஐயமில்லை. இதுவுமன்றி இந்திய மகாஜனங்களும் இத்தகைய சாயம் தோய்க்கப்பட்ட வஸ்திரங்களையே தம்மால் இயன்றவரையில் உடுப்பதென்று தீர்மானஞ் செய்துகொண்டு அத்தீர்மானத்தில் உறுதியாய் நிற்கவேண்டும்.

எனது அருமைச் சகோதரர்களே! நீங்கள் அப்படி நெறியில் நிற்பீர்களா? ஐயோ! கண்ணிருந்தும் குருடர்போலும், கற்றறிந்தும் மூடர்போலும், தேசாபிமானத்தைத் தினையளவு மெண்ணாமல் அயல்நாட்டு 1703-ம் நம்பர் சலவைமல் துணியையே மேலும் மேலும் ஆதரித்துவர விரும்புவது அழகாமா? ஆழ்ந்து யோசிப்பீர்களாக.

ஆற்காடு, இராஜரத்தின முதலியார், பி. ஏ.

மாதர் நீதிமஞ்சரி.

(301-ம் பக்கத் தொடர்ச்சி.)

கௌசிக வேதியரும் கற்புடைப் பத்தினியும்.

விசிட்டபுரமென்னும் நகரத்தில் கௌசிகனென்னும் பெயருடைய வேதியரொருவரிருந்தார். அவர் தம் இளம்பருவத்திலேயே சரீரம் செல்வம் முதலியவற்றின் நிலையாமையை யுணர்ந்தார். "நிலையாமையாகிய

சரீரத்தைக்கொண்டு, நிலைமையுடையதாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைய முயலவேண்டும். அதற்கு வேதாத்தியயனமே சிறந்த சாதனம். வேதமறியாமல் வேதியனெனப் பெயர் வைத்துக்கொள்வது, இரண்டு கண்களு மில்லாதவளைப் *பங்கஜாக்ஷி என்றழைப்பது போலாகும்'' என்று பலவாறு சிந்தித்துத் தகுந்த ஆசாரியனைத் தேடித்திரிந்து, முடிவில் வசிஷ்டமகாமுனிவரை யடைந்து, சாஷ்டாங்கமாக அவரடிகளில் விழுந்து நமஸ்கரித்து, ''சுவாமி! அடியேன் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து சம்சாரக்கிலேசங்களை யொழித்து உய்யும்படிக் கிருபை புரியவேண்டும்'' என வேண்டி அவரருள் பெற்று, வேதங்களைக் கற்றுக்கொண்டிருந்தார்.

இங்ஙனமாக, ஓர்நாள், அப்பார்ப்பனர் ஏதோ வொரு காரியமாக வெளிச் சென்றார். நடுப்பகலாகலின் சூரிய வெப்பந் தாங்கமுடியாமல் ஓர் மரநிழலில் தங்கினார். அப்படி உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது, குளிர்ந்த ஸ்பரிசத்தை யுடைய யாதோ ஒரு பொருள் தலைமீது விழுந்ததாகத் தோன்றவே அவர் திடுக்கிட்டு, கையால் துடைத்துப் பார்த்தார். அது ஓர் பறவையின் எச்ச (மல)மாகக் காணப்பட்டது. அண்ணாந்து நோக்கினார். தன் தலைக்கு நேராக அம்மரத்தின் கிளை யொன்றில் ஒரு கொக்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டு, 'அதுவே எச்சமிட்ட தென்றும், அவ்வெச்சமே தம் தலையை அசுத்தப்படுத்தி விட்டதென்றும் அறிந்தார். அவ்வளவுதான், வந்துவிட்டது அளவில்லாத கோபம் ஐயருக்கு. கண்களிரண்டும் சிவந்தன. சிவபிரான்மேல் மன்மதன் மலர்ப்பகழிகளை யெய்த போது அப்பரமசிவன் சினந்து நெற்றிக்கண்ணால் உறுக்கிப் பார்த்தாற் போல பார்த்தார் அக்கொக்கினை. உடனே சிவனுடைய பார்வையால் மதன் எரிந்து சாம்பலானதுபோலவே கொக்கும் சாம்பலாய்விட்டது.

அந்தணருக்குண்டான ஆச்சரியத்திற்களவே யில்லை. ''ஆ ஆ என்ன என் மகிமை! இதுவரை என் பெருமையை யான் அறிந்துகொள்ளாம லிருந்தேனே! என்போன்ற தவச் சிரேஷ்டர் இவ்வுலகில் வேறு யாவ ரிருப்பார்'' என்றெண்ணினார். அகங்காரம் மேலிட்டது. அனைவரும் தன்னை விடத் தாழ்ந்தவர்களே யெனக் கருதினார். உலகத்தை யழிக்கவும் படைக்கவும் காக்கவும் தன்னாலாகுமென்று இறுமாப்புக்கொண்டார். அந்தோ பாவம்! அழிவுக்கு முன்னணை அகந்தை யென்பதை அறியவில்லை போலும் அவ்வந்தணர்.

மீண்டும் நடந்து சென்றார். பொழுது பட்டது. கொக்கை யெரித்த கௌசிகரைப் பசி யெரிக்க ஆரம்பித்தது. அவர் அகங்காரம் பசியிடம் செல்லுமோ? அருகிலிருந்த அக்கிரகாரத்துள் நுழைந்து ஓர் வீட்டின் தலைக்கடையில் நின்று அன்ன மிரந்தார். அதை அவ்வீட்டிலுள்ள உத்தமி கேட்டாளாயினும் தன்நாயகன் சாப்பிட்டுக்கொண் டிருந்தமையால்,

---

*பங்கஜம் - தாமரை; அக்ஷம் - கண்; பங்கஜாக்ஷி - தாமரை மலர் போன்ற அழகிய கண்களை யுடையவள்.

அவருக்குப் பணிவுடனும் பக்தியுடனும் சமீபத்திலிருந்து வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண் டிருந்தாளாதலின் வந்த அதிதிக்கு உடனே அன்னமிடக்கூடவில்லை. ஓர் தாயானவள் தன் குழந்தைக்கு அன்னமூட்டும்பொழுது சமீபத்திலிருந்து பலவகை வேடிக்கைகளைக் காட்டி உண்பிப்பதுபோல மனைவியும் கணவன் போஜனம் செய்யுங்காலத்தில் அருகிலிருந்து, சாப்பிடவொட்டாது தடுக்கும் எவ்வகை யெண்ணங்களும் மனத்தில் தோன்றாதபடி, இனிய வார்த்தைகளால் சந்தோஷமுண்டாக்கிக் கொண்டிருக்க வேண்டியது கடமை யல்லவா?

பர்த்தாவைப் பக்தியுடன் உபசரித்து உண்ணச்செய்து கொண்டிருந்த அவ்வுத்தமி, அவர் உண்டு முடிந்ததும் கைகால்களைச் சுத்தம் செய்வித்து, தாம்பூலமளித்துவிட்டு, அதிதிக்கு அன்னமிட ஆவலோடு சென்று ஓர் பாத்திரத்தில் அன்னமெடுத்துக்கொண்டு வெளியில் வந்தாள். "வெறுவாயை மெல்லும் அம்மைக்கு நாழி அவல் அகப்பட்டதுபோல" என்னும் பழமொழிப்படி, தன் கோபப்பார்வையானது எதிரில் பட்ட பொருள்களை யெல்லாம் எரிக்குந் தன்மையுடையது என்னும் அகங்காரம் தலைக்கேறி, உலகமுழுதும் தனக்கு அடங்கி மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்றும், தற்பெருமை கொண்டிருக்கும் அவர் ஓர் பெண்பால் தன்னை யலட்சியம் செய்யக்கண்டால் சும்மா இருப்பாரா? காலாக்கினி ருத்திரன்போலச் சினந்து "பெண்ணே! நான் எவ்வளவு நேரமாக இங்கு நின்றுகொண் டிருக்கிறேன்! உண்டென்றும் இல்லை யென்றும் உடனே சொல்லி விடாமல் என்னைக் காக்க வைத்தாயல்லவா? வந்த அதிதிக்கு உபசாரம் செய்வதைவிடப் புருடனுக்குத் தொண்டு செய்வது சிரேஷ்டமென்று நினைத்தாய்போலும்! என்னை யாரென்றெண்ணினை? தராதரந் தெரியாமல் சாமானியனாகக் கருதியோ உபேக்ஷை செய்தாய்?" என்று கூறிக் கண்களை உருட்டி ஒரு பார்வை பார்த்தார். அப்படிப் பார்த்தால் கொக்கைப்போலச் சாம்பலாய் விடுவாள் என்ற எண்ணம் போலும்.

அவரது உள்ளக்கருத்தை உள்ளபடி உணர்ந்த அவ்வுத்தமி அவரது பேதைமையைக் குறித்து நகைத்து அவரை நோக்கி "ஓ பிராம்மணா! என்னைக் கொக்கென்று நினைத்தாயா? நீ ஒன்றுமறியாதவன். தருமநெறி இன்னதென்பதை நீ அறியாய். தெரியாதவன் ஒருவன், தன்னை எல்லாந் தெரிந்தவனாக மதித்து விடுவானானால் பிறர் சொல்வதையும் கேட்கமாட்டான். நீயும் அத்தகைய நிலையிலிருக்கிறா யாகையால் சொன்னாலும் கேட்கப்போகிறதில்லை 'அரை கல்வி முழுமொட்டை' யென்பார்கள். நிறைகுடம் நீர் தளும்பாது. நீ குறைகுடமாகலின் கூத்தாடுகின்றனை. நீ இன்னும் பக்குவப்படவேண்டி யிருக்கிறது. அதற்குள் அவசரப்பட்டுவிட்டாய். அந்த அகங்காரம் உன்னைக் கெடுப்பதற்காக உன் தலைமேல் ஏறி உட்கார்ந்துகொண் டிருக்கிறது. நீ பக்குவப்படவேண்டுமானால் பொறு

மையுடன் சாஸ்திரவிசாரணை செய்து சாது சங்கப் பழக்கமுறவேண்டும். நான் இவ்வாறு சொல்வதன் காரணமென்னவென்றால், நான் என் கடமையினின்றும் சிறிதும் தவறவேயில்லை. அதற்காக நீ சந்தோஷிக்க வேண்டியதை விட்டுக் கோபங்கொண்டனை. இது நீ அனுபவமற்றவனென்பதைக் காட்டுகின்றது. என்போன்ற மாதர்களின் கடமையைச் சுருக்கமாகக் கூறுகிறேன் கேட்பாயாக.

"குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்றபடி கற்புடை மடந்தையர்க்குக் காந்தனே கடவுள். ஆகலின் பதி பக்தியே பகவத்பக்தி. கணவன்தொண்டே கடவுள்தொண்டு. கணவன் கட்டளையைக் கடவாமையே சிறந்த தவம்; அதுவே கற்பு. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" அதுவே தானமும் தருமமும். காரிகைகளுக்குக் கணவனைத் தவிர வேறு கடவுளில்லை; தவமில்லை; தருமமில்லை; தானமில்லை. நாயகனது குறிப்பறிந்து நடப்பவளே நல்ல மனைவி. "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்பது முதுமொழி. பர்த்தா எக்காரணத்தாலேனும் கோபித்தாலும் தாங்களும் கோபிக்காமல் பொறுமையைக் கைக்கொள்ளல் வேண்டும். அவர் துன்பம் தம் துன்பமாகவும், அவர் இன்பம் தம்மின்பமாகவும், அவர்பகைவரைத் தம் பகைவராகவும், அவர் நட்பினரைத் தம் நட்பினராகவும் கருதி யொழுகல் அவசியம். அவர் புசித்தபின் தாம் புசிக்கவேண்டும்; அவர் உறங்கியபின்பு தாம் உறங்கவேண்டும்; அவர் விழித்தெழுமுன் தாம் எழுந்து தந்தசுத்தி செய்து முகங்கழுவி மங்களகரமான முகத்துடன் நாயகர் துயில்விட்டெழுகையில் அவரெதிர் சென்று பாதங்களில் விழுந்து பணிதல் வேண்டும். அன்னிய புருடரைக் காண்டலும், அவர்களைப் புகழ்ந்து பேசுதலும், பிறர் புகழக்கேட்டலும் கூடாவாம். பொதுவாகக் கூறினால், மனைவியர் மணாளனை அன்னபானாதிகளால் போஷிக்கும் விஷயத்தில் அன்னையைப்போலவும், பணிவிடை புரியும் விஷயத்தில் அடிமையைப்போலவும், அவர்களாலாவது குடும்ப நிர்வாகத்தாலாவது எவ்வளவு கஷ்டங்கள் நேரினும் பொறுமையுடன் சகிப்பதில் பூமிதேவியைப்போலவும் நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு பிறதெய்வங்களைத் தொழாமல் கொண்டாரையே குலதெய்வமாகக் கொண்டொழுகும் கோதையர் சிறப்பை யார் குணிக்க வல்லார்? அன்னார் மழை பெய்யெனப் பெய்யுமே. உலகத்தை யழிக்கக் கருதினும் அக்கணமே அழியுமே. ஆகையால் அந்தண! என் நாயகன் பணிவிடையில் நானிருக்கும்போது சாக்ஷாத் பரமசிவனே வந்தாலும் எனக்கு நிமித்தமில்லை. இங்ஙனமாக, நீ தெரியாத்தனத்தால் கோபிப்பது அழகல்ல" வெனக் கூறி முடித்தாள்.

அதைக்கேட்ட கௌசிக வேதியர் பயந்து ஸ்தம்பித்து நின்று 'என்ன வியப்பு! எனக்கு மாத்திரம் தெரிந்த கொக்கின் சங்கதியை, இவ்வம்மை யார் எங்ஙனமறிந்தார்? கற்பின் மகிமையே மகிமை! இவளல்லவா பாக்கிய

சாலி! விரதசீலி! எனப் பலவாறு புகழ்ந்து மும்முறை வலம்வந்து முடி அடியில் பட விழுந்து பணிந்து எழுந்து கைகூப்பி, "தாயே! என்னைப் புனிதனாக்கவேண்டும்" என வேண்டினர். அப்புனிதவதியார், அவரைப்பார்த்து "ஐயா! மிதுலாபுரியில் தருமவியாதனென்றொருவேட னிருக்கிறான். அவனிடம் சென்று தருமோபதேசம் பெற்றுக்கொள்ளும்" எனக் கூற, வேதியர் மறுபடியும் அவ்வம்மையை நமஸ்கரித்து, "யான் செய்த தவமே வடிவெடுத்து வந்தாற்போலும் அம்மணி! என் குற்றத்தை மன்னிக்கவேண்டும் தாயே" என்று புகழ்ந்து விடை பெற்று, மிதுலா நகரஞ்சென்று, தருமவியாதனிடம் உபதேசம்பெற்று சன்மார்க்கத்தை யடைந்தார்.

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

கம்பராமாயண விஞ விடை.

சென்ற புரட்டாசிமாத சஞ்சிகையில் கம்பராமாயணவிஞ வென்று தலைப்பெயர்கொண்டு ஓர் வியாசம் வெளிவந்தது. அவ்வியாசத்தை வாசித்ததும் என் மனதி லவ்விஞவுக்கு விடைதோன்றியதை நான் வெளியிடுகிறேன்.

கம்பர் பாடிமுடித்த காப்பியத்தை திருவரங்கம் திருக்கோயில் ஸன்னிதானத்தில் அரங்கேற்றல்வேண்டி யவ்வரங்க வாசிகளின் முக்கியமானவர்களை வினவ வவர்களதில் நரஸ்துதி யிருக்கக்கண்டு அது அச்சந்நிதானத்தி லரங்கேற்றத்தக்கதல்லவென்று மனதினினைந்தவர்களாய் வீஞகைவலை அவர் கையொப்பம் இவர் கையொப்பம் வாங்கிவரச்சொல்லி அதின் மூலமாயினும் விக்கினங்கள் நேரட்டுமென்றெண்ணிக் கடைசியாக வவர் மகன் அம்பிகாபதியின் கையொப்பமும் வாங்கிவரச் சொன்னார்கள். தனக்கு மேலான வித்துவானல்ல னாதலால் சற்று கிலேசித்து ஆயினு மவன் தன் மகன்தானே என்றெண்ணி அவனிடம் சென்று பிள்ளாய்! இக்காவியத்திற்கு உன் கையொப்பமும் வேண்டுமாம் கொடுவென்றார். தனக்குக்கொடுக்கக் கூடிய பூஸ்திதி யொன்றும் தன் பிதாவிடமில்லை; பெருங் காப்பியம்பாடி முடித்தனரே அதில் எதாவது சூட்சும மந்திரமிருக்கும் அது தனக்குப் பயன் பயக்கும் அதை யறிந்துகொள்வோமென்று கருதி இக்காவ்வியத்தில் எனக்கு எதாவது ஆஸ்பதமிருக்கிறதாவென்று வினவினன். அழுகிற குழந்தைகளை சாந்தப்படுத்துவதற்காக அடைமொழிகள் சேர்த்துச் சளசள கொள கொள சளசள மளமள என்று பெற்றோர்கள் சொல்வதுண்டு. தன்மகன் என்ற ஸ்வாதந்தரியத்தோடு நீ ஆஸ்பதம் வேண்டுகிறாயே உனக்கும் வைத்திருக்கிறேன் என்று சளசள களகள, கொள கொள, கிளுகிளு என்ற விந்நான்கு அடைமொழிகளையும் அவைகள் அமைந்துள்ள பாடல்களையும் எடுத்தோதினர். இதுதான் சாதாரணமாய் வழங்கி வருகிற இச்சந்தர்ப்பத்தின் கருத்து.

உளக் கருத்து ஒன்றுள அதாவது.

அம்பிகாபதி என்பது யாருடைய நாமம்? அம்பிகை யென்று பார்வதிக்குச் சொல்லுகிறது பார்வதியை யாதிபத்தியமாகக் கொண்டவர் ஈசுவரன். அம்பிகாபதி யென்றது ஈசுவரனுடைய திருநாமம். அவ்வீசுரனை ஆராதிக்கும் வழிகளில் சோடச உபசாரங்கள் ஏற்பட்டன. அவைகளில் முக்கியமானவைகள் நான்கு அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம், கற்பூரஹாராதி யிவையே தெய்வத்தன்மை வாய்ந்த தாயுமானாரும் இதைப் பாடியுள்ளார்.

துரியநிறை சாந்த தேவதையா முனக்கே
தொழும்பனன்ப பிஷேக நீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்திய மபிராண
னோங்கு பதி தூபதீபம்.

ஒருகாலமன்றிது சதாகால பூஜையாம்.

[அர்ச்சனை எல்லாவற்றிலும் முக்கியமானது. பூஜை யென்றாலே அர்ச்சனை யென்றர்த்தமாகும்]

சளசள வென்று மழைத்தாரைகள் விழுவதுபோல் கங்கா ஜலத்தாலும் பால், இளநீர், பந்நீர், முதலானதுகளாலும் தாரை தாரையா யபிஷேகம் செய்வதும், களகளவென நல்முத்துதிர்தல்போல் புஷ்பங்களை யுதிர்த்து அர்ச்சனை செய்வதும், சோளசோள பாயஸம் முதலான வற்புதமான உண்டிகளை நைவேத்தியம், செய்வதும் கிளுகிளெனப் பிரகாசமாக கற்பூரஹாரதி யெடுப்பதுமே அம்பிகாபதியை வழிபடக்கூடிய சிறந்த பூஜையாகும். இந்நான்கினையும் நீ கைக்கொண்டு தினந்தோறும் நீயீசுவரனை யாராதித்து வந்தாயானால் உனக்கு மேலான பதவி கிடைக்குமென்று குறிக்கும்படியாக அந்நான்கு அடைமொழிகளை எடுத்துக் காட்டினார் என்றும்.

வெ. நரஸிம்மய்யர், B. A,
Senior Auditor, Local Fund Accounts, Camp Mergin, Burma.



சுக்கு கியாழமோ வல்ல பால் கஞ்சியே

காலைக் காப்பிக்குப்பதில் பருகும் நல்லுணவாம்.

சுக்குநீர்க் கியாழத்தைத் தித்திப்பிட்டு பால்சேர்த்து காப்பியைபபோல் செய்து காப்பிக்குப் பதிலாக அதைப் பருகுவதினால் தேகத்திலுள்ள அனேக வியாதிகளை யகற்றிவிடுமென்றும் ஆதலால் ஒவ்வொருவரும் சுக்குநீர் கியாழத்தையே காப்பி தேயிலை முதலான பானங்களுக்குப்பதிலாகச் சாப்பிட்டுவரும்படிக்கும் ஓர் நிரூபர் வேண்டியுள்ளார். சுக்குக் கியாழத்தை 10 பொழுது 20 பொழுது சாப்பிட மேற்கூறிய சௌக்கியங்களைக் கொடுப்பதுண்மையே. அதைத் தினசரி ஆகாராதிகளிலொன்றாகக் காலையிலும் மிடைவேளையிலும் பருகுவது தேக அசௌக

கியத்தை யுண்டாக்கு மல்லாது தேக சௌக்கியத்தைக் கொடாது. நோய் கண்டபொழுது மருந்துண்டால் அந்நோயைக் கண்டிக்கும். நோயைக் கண்டிக்கக்கூடிய குணம் தன்னிடத்தி லிருக்கிறதென்று வம்மருந்தை உணவாக வுண்ணலாமா. சுக்கு வயிற்றைக் கல்லும், வயிற்றில் புண்ணை புண்டாக்கும். அதனால் ஜீரண சக்தி குறையும் அது கொடிய வுஷ்ணம். பிரதிதினமுமுட்கொண்டால் வயிற்றிரைச்சல், வயிற்றுநோவு, தலைவலி முதலான வியாதிகளுக்குக் காரணமாகும்.

நன்னாரிவேரைத் தூளாக்கி அதைக் காப்பியைப்போல் தயார்செய்து பருகுவதுண்டு. அது வயிற்றழலை யெடுத்துவிடும். தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் என்றாலும் நெடுநாள் சாப்பிட்டு வந்தால் வாதத்திற்கிடமாகும். இதை யெல்லாம் காப்பிக்கு மாற்றாகவும் தற்கால சாந்தியாகவும் இடையிடையே பருகலாமே யல்லாது தினசரி உணவாக வுட்கொள்ள முடியாது.

காலையில் ஒரு முஷ்டி (கைப்பிடியளவு) அரிசி நொய்யை யெடுத்துக் களைந்து காலேயரைக்கால் அல்லது அரைபடி ஜலத்தில் கஞ்சியாக காய்ச்சி அக்கஞ்சியைக் கரையவிட்டு கஞ்சித்தெளுவை யிறுத்துக் கொண்டு வேண்டிய பாலையும் சீனியையும் சேர்த்து 10 நிமிஷம் வைத்திருந்து பிறகு அடுப்பிலிருந்து யிறக்கி அதைத் தினம் காலையில் காப்பிக்குப்பதிலாகப் பருகினால் தேகத்துக்கு வலுவுமன்றி காப்பி, தேயிலை, கொக்கோ சுக்குக் கியாழம் இவைகளைப்போல் கெடுதல் செய்யாது. தேகசௌக்கியத்தைக் கொடுக்கும். இது ஓர் நல்லுணவுமாம். இதினனுபோகத்தைப் பாருங்கள். ஓர் நண்பர்.

குறிப்பு:—இது உத்தமமான ஆகாரமே. வியாதியஸ்தரும் அருந்தலாம். இக்கஞ்சியில் ஒரு சிறு சுக்குத் துண்டைப்போட்டுக் காய்ச்சுவதால் மணம் தருவதோடு வாயு சேராமலும் செய்யும். மற்றபடி இந் நண்பர் கூறுவதுபோல் சுக்குக்குச் சில கெட்ட குணங்களு முண்டு. அதை எப்போதும்தோலை நீக்கியே உபயோகிக்கவேண்டும். பத்திரிகாசிரியர்.

செவிச் செல்வம்.

இப்பூவுலகின்கண் எல்லாம்வல்ல இறைவனால், தமது வாணாளில் இன்பங்களை நுகர்ந்தின்புறுதற்காக மக்கட்கு நல்கப் பெறும் செல்வங்கள் பற்பல வகையாம். ஆயினும் அவர்களது அறிவுக்குறைவினால், அவற்றை வாய்க்கப் பெறாரகளெனின், அப்பிழை அவர்களைச் சார்ந்ததேயன்றி இறைவன்பாலதன்று. அவற்றுள், முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் பெருமை பெற்றோங்குவன சிறப்பான பொருட்செல்வம் கல்விச் செல்வம் எனு மிரண்டேயாம். ஏனையவனைத்தும் அவற்றுளடங்கும். இவை யிரண்டினுள்ளும் கல்விச் செல்வமே சிறப்புடைத்து. ஏனெனில்

அச்செல்வம் பொருட்செல்வம்போல் எவ்வாற்றானும் எக்காலத்தும் ஒரு சிறிது மழியாதாகலின். சிற்க,

இக் கல்விச் செல்வம் இருவகையாற் பெறலாம். ஒன்று கற்றுணர்ந்த வல்லுநர்பாற் சென்று, அவர்கட்கு ஊழியம் புரிந்து, அவர்கள் நீண்ட காலமாகச் சேமித்து வைத்திருக்கும் அரும்பெரும் பொருள்களாய உறுதிப் பொருள்களென்னு முண்மைகளைப் பன்முறை கேட்டுச் சிந்தித்துணர் தல்; மற்றொன்று தானே பிறிதெவருடைய உதவியுமின்றி தனதறிவைக் கொண்டே பன்முறைபயின்று ஆராய்ந்து தெளிந்துணர்தல். முன்னையதே இவை யிரண்டினுள்ளும் சாலச் சிறப்புடையது. எங்ஙனமெனில், தானே கற்றுத் தெளிதலில் பிழைகள் நேரிடக்கூடும். அன்றியும் பழக்கத்திற் கொணர்தலு மருமை. கேட்டலிலோவெனில் அறிஞர்கள்பால் வழி வழியாகக் கேட்டுணர்ந்த பெரியார்களிடத்திற் கற்பதில் பிழைகளிருத்தலரிது. ஆசிரியரிடத்தும் தம்மை யொத்த சீடர்களிடத்தும் அவ்வப்போது தமக்குண்டாகும் ஐயங்களையும் நீக்கிக்கொள்ளலாம். அன்றியும் குருகுல வாசம் செய்யும்போது, குருவினது உபதேச மொழிகளை அனுபவத்தில் பெற்றுக்கொள்ளப் பழகுதலு மியல்பு. இக்கருத்து கீழ்வரும் நன்னூற் சூத்திரங்களாற் புலனாகும்:—"ஆசானுரைத்த தமைவரக்கொளினும் - காற் கூறல்லது பற்றலனாகும்; அவ்வினையாள ரொடுபயில்வகை யொருகாற்— செவ்விதினுரைப்ப வவ்விருகாலும் — மையறு புலமை மாண்புடைத் தாகும்." இதுபற்றியே தமிழ்ப்பெரு மூதாட்டியாம் ஔவையார் "கேள்வி முயல்" எனவும், ஆன்றோர்கள் "கற்றலிற் கேட்டலே நன்று" எனவும் அறிவுறுத்திப் போந்தனர்.

இயற்கை மண்டபங்களாய கொழுமையுற்ற மரங்களினடியி லமர்ந்து உயிர்க்குறுதி பயப்பனவாய உயர்பொருள்களை, ஐயமற ஆசிரியரால் ஊட்டப்பெற்று நற்கல்வி பயில்வதை விடுத்து, கற்களாற் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டிடங்களில் உயரிய ஆசனங்களி லமர்ந்து, பிறநாட்டு சரித்திரங்களையும், பொருளாதார நிலைமைகளையும் விரித்துப் போதிக்கும் புத்தகங்களைக் கட்டி யழுது, சந்தேகங்கள் மலிந்து குழம்பிய மனத்தினராய்—கேள்வி புணர்விலராய்—வாழ்வதை விரும்பும் இளைஞர்கள் மலியுங் காலமும், இப்பாரத மணித்திருநாட்டிற்கு வந்துள்ளதை இறைவன் திருவிளையாடலென்றது வேறென்னென் றியம்புவது? அந்தோ! தமிழ்த் தாய்க்கு இன்னும் நற்காலம் பிறக்கவில்லைபோலும்! இவ்விடத்தி லிதைப் பற்றி இன்னும் விரித்துரைப்பது அனாவசியமாதலின், மேற்செல்வோம்.

ஒருவன் அறிவுநூல்கள் பலவற்றையும் ஓதாதுணரும் பேற்றை இயல்பாகவே பெற்றுளானாயினும் தக்க ஆசான்பால் அந்நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். அத்தகையாரே பொது மக்களாற் போற்றற்குரியராவர். இதுபற்றியே யன்றோ சர்வேஸ்வரனின் ஸாக்ஷாத் அம்சமாய ஸ்ரீராமன் வசிஷ்ட விசுவாமித்ரர்களிடத்தும், ஸ்ரீ கிருஷ்ணன்

சாந்தீபமுனி யிடத்தும் கலைகளைக் கற்றனர்? அன்றியும் ஒருவன் கல்லாதவனா யிருப்பினும் அறிவாளிகளிடத்தில் உண்மைப் பொருள்களைக் கேட்டுணர்ந்திருப்பின், அவைகள் அவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்து பேருதவி புரிவனவாகும். சிவபெருமானாரது திருக்கண்களி லிரத்தம் வடியக்கண்டு, அஃது நிற்குமாறு காணாது பலவாறு துயருற்றுத் தியங்கிய கண்ணப்பனாருக்கு, "ஊனுக்கு ஊன் அப்புதல் வேண்டும்" எனுங்கேள்வியறிவு தக்க சமயத்தில் பேருதவி செய்ததன்றோ? இதுபற்றியே "கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்—கொற்கத்தி னூற்றாந் துணை" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் கூறியருளினர். அன்றியும், பலகலைகளும் வல்ல காண்டீவதாரியான பற்குனன் போர்க்களத்தை நண்ணியதும் தனது செயலால் விளையப்போகும் துயரங்கட் காற்றாதாகி, செயலற்றுச் சோர்ந்து வீழ்ந்தவிடத்து, ஆபத்சகாயனாய ஆதி மூலனாது திவ்யோபதேசங்களைச் செவியுற்ற பின்னரன்றோ, தனது ஜாதி தர்மத்தையும் கடமையையும் வீரத்தையு முணரப்பெற்று போர்க்கெழுந்து பொருதிப் புகழ் பூண்டனன்.

எண்குணமுடைய இறைவனை அடைதற்பொருட்டு மக்கட்கு எளிதிலுதவி புரிவதெது? கேள்வியறிவே யன்றோ? இக்கருத்தை நனிவிளக்குதற் பொருட்டே, சைவானுபூதி கைவரப்பெற்ற தவப்பெருஞ் செல்வராந் தாயுமானவர்,

"பெற்றவர் பெற்ற பெருந்தவக்குன்றே! பெருகிய கருணைவாரிதியே!
நற்றவத்துணையே! ஆனந்தக்கடலே! * ஞாதுரு ஞான ஞேயங்கள்
அற்றவர்க்கறாத நட்புடைக் கலப்பே! அநேகமாய் நின்னடிக்கன்பு
கற்றதுங்கேள்வி கேட்டதும் நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோ காணே"

எனவும்,

"† கேட்டன் முதலான்காலே ‡ கேடிலா நாற்பதமும்
வாட்டமற வெனக்கு வாய்க்குநா ளெந்நாளோ"

எனவும், அருளிச் செய்வாராயினர். இத்தகைய செவியின்பம் நிறையப் பெற்ற காலக்ஷேபங்கள் நவீனநாகரிகம் பெருகிவரு மிக்காலத்தும், பற்பல விடங்களிற் பெரும்பாலாரால், மிக்க சிரத்தையுடன் விரும்பிக் கேட்கப் பெறுவது மிகமகிழ்வைத் தரத்தக்க தொன்றாம். அன்றியும் கேள்வியறிவினை யுடையவர்கள், இப்பூவுலகத்தவராயினும் தேவர்களொடு மொப்பாவரென்பதை,

"செவியுணவிற் கேள்வி யறிவுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து"

என நாயனார் பொய்யாமொழியிற் புகன்றுளாரன்றோ?

---

* ஞாதுரு-காண்பான்; ஞானம்-காட்சி; ஞேயம்-காணப்படு பொருள்.
† கேட்டன் முதலான்கு=கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்.
‡ நாற்பதங்கள்=சாலோகம்; சாமீபம்; சாரூபம்; சாயுஜ்யம்.

மற்றும், கேள்வி யறிவாற் றுளைக்கப் பெறாத செவிகள், ஓசை மாத்திரத்தை உணருந் தன்மையவாயினும், உண்மையிலவை செவிடேயாம். இஃது "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்—றோட்கப் படாத செவி" எனும் திருவள்ளுவரது திருவாக்கால் தெளிக. அன்றியும் ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள்களைச் செவியேற்றக் கடவன். அவை அவனுக்கு, நிறைந்த பெருமையை நல்கும். ஆகலின் கூர்ந்தாராயுமிடத்து செவிச் செல்வத்தினும் சிறந்ததொரு செல்வம் பிறிதெஃதுமில்லை யென்பது வெள்ளிடை மலைபோற் செவ்விதிற் புலனும். இது கீழ் வரும் பொய்யிற் புலவரது திருவாக்குகளாற் றெரிகிறது.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை"

இறுதியாக, அன்பர்காள்! இதுகாறுங் கூறியவாற்றால், "கற்றலிற் கேட்டலினிது" எனு முண்மை நனி பெறப்படுகின்றது. ஆகலின், கற்றுணர்ந்தடங்கிய கல்வியாளர்களிடத்து, உயிர்க்குறுதி பயப்பனவாய உண்மைப் பொருள்களைக் கேட்டுணர்ந்து, அதன்வழி நடத்தலின் பயனை ஆதிமுதல்வனாய ஆண்டவனது திருவருள் பெற்றுத் திளைத்திருப்போமாக.

ஆ. வ. பதுமநாபபிள்ளை,
"திருமகணிலயம்," ஆரியூர்.



நமது "ஆனந்த போதினியும்" கிறிஸ்து மதமும்.

நமது ஆனந்தனின் மாதாந்தப் பத்திரிகைகளிற் சிலவற்றை யான் எனது நண்பரொருவரிடம் வாங்கிப் படித்ததில் ஆடம்பரமாக வெளி வரும் ஏனைய பத்திரிகைகளைப்போலன்றி, சிறந்த விஷயங்களை யுடையதாகவும் ஏழைகள்கூட வாங்கி வாசிக்கக்கூடிய அவ்வளவு குறைந்த சந்தாவை யுடையதாகவும் இருக்கக்கண்டு, இவ்வருஷமுதல் யானும் அதற்கு ஓர் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கின்றேன். ஆனால் என்னைப்போன்ற கிறிஸ்தவ நண்பர்களிற் சிலர் என்னிடம் வந்து "ஆனந்தபோதினி" சதா காலமும் கிறிஸ்துமதத்தைத் தூஷித்தெழுதுகிறதென்றும், உண்மையான கிறிஸ்தவர்கள் இப்பத்திரிகையை ஆதரிக்கக் கூடாதென்றும் புத்தி சொல்லுகிறார்கள். அவர்களோடு நான் வாதாடினதில், சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, கிறிஸ்துமதம் தவிர மற்ற மதங்களெல்லாம் பொய் யென்றும், அம்மதங்களைத் தழுவி நிற்போருக்கு மோட்சம் (கைலாசம்) கிடையாதென்றும் சாதிக்கிறார்கள். இவ்விதண்டவாதம் எனக்குச் சற்றேனும் பொருத்தமாகத் தோற்றவில்லை. இவர்கள் தங்கள் புத்தியைச் சற்று விசாலப்படுத்தி யோசிப்பார்களானால் இப்படி வீண்வாதம் செய்ய முன் வரார்கள். கிறிஸ்து மதம் உண்மையான மதம் என்பதற்கு ஆக்ஷே

பனையில்லை யெனினும், மற்ற மதங்கள் உண்மையானவையல்ல வென்பதற்கு என்ன ஆதாரமுண்டோ தெரியவில்லை. ஆனால் இவர்கள் ஊற்றுக்கு நிற்காத பலவித காரணங்களை யெடுத்துக் காட்டுகிறார்கள். ஒரே கடவுள் எப்படிப் பல மதங்களை யுண்டாக்குவாரென்றும், கடவுள் ஒன்றாயிருக்கும்போது மதமும் ஒன்றாய்த்தா னிருக்கவேண்டும், அந்த மதம் கிறிஸ்துமதந்தான் என்றும் வாதாடுகிறார்கள். ஏன் அந்த மதம் இந்து மதமா யிருக்கக்கூடாது என்று நாம் கேட்குமுன் கீழ்க்கண்ட உதாரணத்தைக் கவனிப்போம்.

2. ஓர் மாமரத்தை எடுத்துக்கொள்வோம்; அதன் அடிமரம் ஒன்று. அதினின்றும் பல பெரிய கிளைகளிலிருந்து பல நூறு கிளைகளும் பிரிகின்றன. ஆனால் எல்லாக் கிளைகளிலும் ஒரே விதமான ருசியுள்ள பழங்கள்தான் கிடைக்கும். அம்மரத்தின் கிளைகளில் அவரவர் இஷ்டப்படி எந்தக் கிளையில் ஏறினாலும் பழங்கள் கிடைப்பது நிச்சயம். ஒருமரம் எப்படிப் பல கிளைகள் விடும் என்று கேட்பது எப்படிப் பொருந்தாதோ, அப்படியே ஒரே கடவுள் எப்படிப் பல மதங்களை யுண்டாக்குவார் என்பதும் பொருந்தாது. அவனவன் பிரயாசத்துக்குத் தக்கபடி எந்தக் கிளையிலேறினாலும் பழம் கிடைப்பதுபோல் எம்மதத்தைத் தழுவினும் அவனவன் பாவபுண்ணியங்களுக்குத் தக்கவாறு கைலாச பலனை யடைவான். அடிமரமாகிய கடவுளின் வழியாய் மதங்களெனப்படும் கிளைகளில் எதைத் தழுவினாலும் பலன் ஒன்றே யாகும்.

3. உலகத்திலேயே தாங்கள்தான் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மேலான மனிதரென்றும், மற்ற தேசத்தாரும், ஜாதியாரும் தங்களுக்கு அடிமைகளென்றும், உலகத்திலுள்ள சகல போக பாக்கியங்களையும் தங்களைத் தவிர வேறொருவர் அனுபவிக்க லாயக்கானவர்களல்லவென்றும் நினைப்பவர்கள் தோன்றியிருக்கும் இக்கலிகாலத்துக்கேற்றபடி, ஒரே மதம்தான் (கிறிஸ்து மதம்) உண்மையானது என்று சொல்லும் வாதமும் தலை காட்டி யிருப்பதாகக் கருதவேண்டி யிருக்கிறது. இதை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு, "ஆனந்தன்" மதத்தைத் தூஷிக்கிறான் என்னும் கூற்றைச் சற்று ஆராய்வோம்.

4. இதற்கு உதாரணமாக ஆனந்தனிலுள்ள சில வியாசங்களை எடுத்துக் காட்டினார்கள். அவ்வியாசங்களை வாசித்துப் பார்த்ததில், வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் மத ஊழியம் செய்தும், புறமதங்கள் பொய்யென்று தெருக்களிலும், சந்திகளிலும் நின்று பிரசங்கம் செய்தும், ஏழைகளையும், ஸ்திரமான புத்தி யில்லாதவர்களையும் ஏமாற்றி, ஆசை வார்த்தை காட்டி மயக்கி கிறிஸ்துமதத்தில் சேர்த்தும், மேலான அதிகாரிகள் முன் கிறிஸ்துமேல் வெகு பக்தி யுடையவர்கள்போல் நடித்தும், தங்கள் காலத்தைக் கழித்துவரும் சிலருடைய செய்கைகளை மாத்திரம் தகுந்த முகாந்தரங்களைக்கொண்டு கண்டித்தெழுதியிருக்கிறதே தவிர, எந்தச் சமயத்தை

யும் எம்மதத்தையும் சிஞ்சித்தும் தூஷித்தெழுதி யிருப்பதாகத் தெரியவில்லை. "வெளியிலிருக்கும் ஒணானைப் பிடித்து உள்ளே விட்டுக்கொண்டு குடைகிறதே குடைகிறதே" என்று கத்துவதுபோல் இவர்களே (கிறிஸ்தவர்களே) முதலில் இந்துமதம் பொய்யென்று தண்டோராப் போடுவதினால் ஆனந்தன் தன் மதத்தின் உண்மையை எடுத்துக்கூறி ஸ்திரப்படுத்துமாறு, அன்னாரின் கூற்றைத் தவறு என்று ரூபிக்க முன் வருகின்றானேயொழிய எந்த மதத்தையும் தூஷிப்பதற்காகவல்ல. ஓர் மதத்தைவிட்டு இன்னொரு மதத்தைத் தழுவுவது கூடவே கூடாது என்பதுதான் எனது அபிப்பிராயம். ஏனெனில் ஒருவன் தன் மதத்தின் உண்மையை முற்றிலும் ஆராய்ந்து சந்தேகமானவைகளைத் தேர்ந்த ஆசானிடம் (குருவிடம்) கேட்டுத் தெளிந்து பின்னும் பொய்யென்று அறிந்தால் மட்டும் வேறு மதத்தைத் தழுவலாம். அப்போதுங்கூட புறமதங்களில் எதைத் தழுவலாம் என்பதையறிய உலகத்திலுள்ள மற்ற மதங்களை யெல்லாம் ஆராயவேண்டும். அதன் பின்பே ஓர் மதத்தைத் தழுவவேண்டும். இதற்கு ஒரு மனிதனுடைய ஆயுளே போதாது. மேலும் இது எல்லா மனிதராலும் செய்யச் சாத்தியப்பட்ட ஓர் காரியமுமன்று.

5. ஆகவே இருந்தது இருந்தாற்போல் ஓர் மதத்தைவிட்டு மற்றொரு மதத்தைத் தழுவுவதற்கு பலகாரணங்க ளிருக்கவேண்டும். அவற்றில் முக்கியமானவை தரித்திரம், ஆசை, வீண் டாம்பீகம் என்ற இம்மூன்றும் முக்கியமானவை. தம்மால் உபதேசிக்கப்பட்ட புண்ணியச் செயல்களை எடுத்து மற்றவர்களுக்குச் சொல்லி சன்மார்க்கத்தில் நடக்கச் செய்ய வேண்டுமென்பது இயேசு நாதருடைய கட்டளையே யன்றி, வயிற்றுப் பிழைப்புக்காக வேத ஊழியஞ் செய்யும் கொஞ்ச வயதுள்ள பெண்களைப் பைபிள் ஊழியராக (Bible women) நியமித்து அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்களுக்குரிய மேலான குணங்களை விடுத்து வீடு வீடாய்ச் சென்று, படித்துக் கொடுப்பதுபோல் பாசாங்கு செய்து, ஒன்றுமறியாத பங்கஜத்தைப்போன்ற சிறுமிகளை நயவஞ்சகங்காட்டி ஏமாற்றி, பெற்றோரும, மற்றோரும், வயிறெரியவிட்டு, நடுராத்திரியில் திருடிச் சென்று மதத்தில் சேர்க்கும்படியாக அவர் சொல்லவே யில்லை.

6. "தன்னைப்போல் பிறனை நேசி" என்று இயேசுக் கிறிஸ்து திருவாய் மலர்ந்தருளியதை இவர்கள் எந்த விதத்தில் கைக்கொள்ளுகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை. தங்களுடைய (கிறிஸ்தவர்களுடைய) பெண்களைப் புறமதஸ்தர் இப்படிச் செய்தால் வயிற்றெரிச்சல் பட்டு என்னென்னவோ காரியங்களெல்லாம் செய்வார்களல்லவா? அப்படிப் போல் மற்றவர்களுக்கு மிருக்குமென்பதை ஏன் இவர்கள் கிஞ்சித்தேனும் உணருவதில்லை? தங்களுக்கு ஒரு நியாயம் பிறருக்கொரு நியாயமா? தற்காலம் உலகமே அப்படித்தானிருக்கிறது. பல உத்தியோகஸ்தர்களை நியமித்து சத்தியத்தையும் சன்மார்க்கத்தையும் போதிக்கலாமே தவிர மேற்கண்ட

வாழு பேதைகளை ஏமாற்றி மதத்தில் சேர்ப்பது வயிற்றுப் பிழைப்புக்காக கிறிஸ்து மதத்தை வியாபாரம் செய்வதற்கே யொப்பாகும். இப்படியெல்லாம் வம்பிழுத்துவிட்டு ஆனந்தன்மேல் வீண்பழி சுமத்துவது பேதமை யன்றோ !

7. கிறிஸ்துமதத்தில் சேர்ந்ததின் பலன் தற்காலம் எப்படி யிருக்கிறதென்றால், அநேக கிறிஸ்தவர்களுக்குத் தாய்நாட்டில் பற்றின்மை, அடிமைப்புத்தி, நம் தேசத்துக் கடுக்காத அநாசரீகத்தை நாகரீகமாகக் கருதி டாம்பீகச் செலவுசெய்வது, தாய்ப்பாஷையை அவமதிப்பது, தலை மொட்டையானது, பாதிமீசைபோனது, பீடி சிகரட்டு சுருட்டு குடிப்பது, மிருகங்களைப்போல் பல்துலக்காமல் பெட்காபி (Bed Coffee)-அருந்துவது, மேல்சட்டை, உள்ச்சட்டை, நடுச்சட்டை, கால்சட்டை, பூட்ஸ், மேஜோடு, காலர், டை, தொப்பி முதலிய அணிவது; இச்செய்கைகளால் நமது பாரதநாட்டைத் தரித்திரத்துக் குள்ளாக்குவது முதலியவைகளே. தற்காலம் இந்துக்களில் உயர்ந்த ஜாதிமுதல் தாழ்ந்த ஜாதிவரையில் இத்தீய வழக்கங்கள் பரவிவிட்ட தெனினும் முதன் முதலாய் இவ்வழக்கங்களை யநுசரித்தவர்கள் கிறிஸ்தவர்களே. இன்னும் இதைப்பற்றி எழுதின் விரியுமாதலால் ஆனந்தனில் இடம் கிடைக்குமோ வென்றஞ்சி இத்துடன் நிறுத்துகிறேன். தற்காலம் கிறிஸ்தவர்களிற் பலர் மேற்படி தீயவழக்கங்களை அறவே யொழித்து வருகிறார்களென்பதை இங்கு திருப்தியுடன் குறிப்பிடுகிறேன். அதுபோல் விதண்டாவாதம் செய்து ஆனந்தன்மேல் பழிசுமத்தி, தேசநன்மையைக் கருதி அவன் சுமந்துவரும் பல அரிய விஷயங்களைப் பலரும் அறியவொட்டாமல் தடுப்பதை விட்டு, எல்லாக் கிறிஸ்தவ சகோதரரும் ஆனந்தனில் சந்தாதாரராகச் சேரும்படி பன்முறையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

A. மெத்துசலா உபாத்தியாயர்,
போர்டு பெண்பாடசாலை, ஜெயங்கொண்ட சோளபுரம்.

குறிப்பு:—பாரபட்ச மின்மையும், உண்மையைத் தாட்சணிய மின்றி கூறும் தைரியமும், விசாலித்த நோக்கமும், கடவுளின் உண்மை லட்சணத்தை யறியும் அறிவு முடையோர் எம்மதத்திலும் உளர் என்பதற்கு நமது நண்பர் ஒரு பெரிய அத்தாட்சியா யிருக்கிறார். இவருடைய உயர்வான கொள்கைகள் எம்மதத்தினரும் திருப்தியோடு ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளே.

கிருஸ்தவர்களில் சிலர் வலிய நமது மதத்தைக் குறைகூறி தூஷித்து நம்மவரை மயக்க முயல்வதால் நாம் நம்மவர்க்கு நமதுமதத்தின் மேன்மையை யெடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்யவேண்டியது நமது கடமை யாகிறது. இன்றேல் நாம் அன்னிய மதங்களிலுள்ள போதனைகளைத் திருட்டாந்தமாக மட்டும் அவசியம் நேர்ந்தபோது எடுத்துக் கூறுவோமே

யன்றி, அவற்றைப்பற்றி நம்மவர்க்கு எச்சரிக்கை செய்யவேண்டிய அவசியமே யிராது.

"எச்சமயத்தும் இயற்கையை விட்டிடலாகாது" என்ற நம்முன்னோர்களாகிய மகான்கள் கொள்கையே நமது கொள்கையும். இச்சஞ்சிகையின் மற்றோர் பக்கத்தில் "ஓர் புதுச்சஞ்சிகை" என்ற விஷயத்தில் நாம் இதைப்பற்றி கூறியுள்ளதைப் பார்க்கக் கோருகிறோம். எம்மதத்தையேனும், எம்மதத்தில் கூறப்பட்ட கடவுளையேனும் தூஷிப்பது ஏகநாயகனாகிய அந்த ஒரு கடவுளைத் தூஷிப்பதாகவே ஆகும் என்பதே யுண்மை. அப்படித் தூஷிப்போர் எல்லா மதங்களாலும் பிரதிபாதிக்கப் படுபவர் அந்த ஒருகடவுளே என்ற உண்மையை யறியாதவராவர்.

நமது நண்பர் உண்மை யறிவோடு சத்தியத்தை மொழிந்ததால் கிருஸ்தவர்களில் சிலர் "இவர் மெய்யான கிருஸ்தவரல்ல" என்று தூஷிப்பார்கள் என்று கருதுகிறோம். அது அவர்களுக்குச் சுபாவமென்பதைத் திருட்டாந்தமாய் அறிந்திருக்கிறோம். பாரபட்சமின்றி நியாயத்தைக் கூறும் நியாயாதிபதியைக் குற்றவாளி தூஷிப்பதியற்கையே.

பத்திரிகாசிரியர்.

முக்கியமாய் அறியவேண்டிய விஷயம்.

கீழ்க்கண்ட விஷயம் "தமிழர் இயக்கம்—"தமிழ்நாடு"— திரு-வி-கலியாண சுந்தரமுதலியார் உபந்நியாசக் குறிப்புகள்" என்ற தலையங்கத்தோடு (28-2-24) நவசக்தியில் வெளிவந்தவற்றிலிருந்து எடுக்கப்பட்டது:-

"தமிழை வளர்த்தல் வேண்டும். தமிழ்த் தாய்க்குச் சிலப்பதிகாரம் மணிமேகலை மட்டுமின்றி ஏனைய அணிகலன்கள் தேவை. அந்நிய பாஷையிலிருக்கும் அருமை விஷயங்களைத் தமிழில் மொழி பெயர்த்திடல் அவசியம். ஆங்கிலேயர் திருக்குறள், திருவாசகம் முதலியவற்றை என் மொழி பெயர்க்கின்றனர்? அவர்கள் பாஷை உலக முழுதும் பரவுவதற்குக் காரணம் இதுவே. தமிழும் உலகறியும் பாஷையாதல் வேண்டும். அப்போது சட்ட சபைகளில் தமிழ்த்தாய்த் தாண்டவம் புரிவாள்.

* * * * * * *

"இவ்வேலை எவரால் செய்யப்படல் வேண்டும்? பண்டிதர்களால் முடியுமா என்றால் முடியாது. அவர்கள் வறுமை, பொறாமை, செருக்கு என்ற மூவகைப் பேயினால் கட்டுண்டு கிடக்கிறார்கள். ஆங்கிலம் பயின்ற தமிழர் என் செய்கின்றனர்? தங்கள் ஓய்வு காலங்களைத் தமிழ் மொழியை வளர்க்க ஏன் செலவிடல் கூடாது? வயது சென்ற முதிர்ந்தவர்களையும் விடுவோம். மாணாக்கர்கள் மனதில் இந்த இயக்கந் தோன்றல்வேண்டும். இத்தாலியா தேசத்து மாசினி இளைஞர்களையே பிடித்தார். தமிழ் எல்லா பாஷைகளுக்கும் முற்பட்ட பாஷை. அயர்லாந்து பெருமைபெற அடிப்படையாகவிருந்தது பாஷாபிவிருத்தியன்றோ? தமிழர் இயக்கத்தில் சேருங்கள், மரியாதை பெறுவீர்கள். நீங்கள் போற்றப்படவேண்டுமானால் பிறப்புரி

மை பெறவேண்டுமானால் தமிழ்நாட்டைப் போற்றுவீர்களாக. தமிழர்கள் என்ற உணர்வு கொண்டு பல வேற்றுமைகளைக் களைவீர்களாக. தமிழ் நாடு பரிணமிக்கும்."

குறிப்பு :—மேற்கண்ட விஷயம் தமிழ்மக்களனைவரும் அவசியம் கவனித்தொழுகவேண்டிய விஷயம் என்பது யாவர்க்கும் நன்கு விளங்கும். நம் நாடு சீர்பட்டு முன்னேற்றமடையவேண்டுமெனின், அன்னிய பாஷையிலுள்ள சாத்திரங்களில் நமக்கு அவசியமானவற்றையெல்லாம் நம் தாய்ப் பாஷையில் மொழிபெயர்த்து நம் நாட்டார்க்குக் கற்பிக்கவேண்டும். ஜபான் தேசம் இவ்வளவு சீக்கிரத்தில் முன்னேற்றமடைந்ததற்கு இதுவே காரணமாகும். அந்த நாட்டிலுள்ள படிப்பாளிகள் அமெரிகா, இங்கிலாந்து, ஜர்மெனி முதலிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அவசியமான தொழில்களையும் சாத்திரங்களையும் கற்றுக்கொண்டு தங்கள் நாட்டிற்கு வந்து, அச் சாஸ்திரங்களைத் தங்கள் தாய்ப்பாஷையில் மொழிபெயர்த்து, பாடசாலைகளும், தொழிற்சாலைகளும் ஸ்தாபித்துத் தம் நாட்டினர்க்கு யாவும் கற்பித்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு ஒரு முக்கியமான உதவியிருந்தது. அதாவது அவர்கள் துரைத்தனமே இக்காரியத்தில் முன்னின்று, அது கைகூடும்படி செய்தது. நாம் நமது துரைத்தனத்தாரிடம் இவ்விஷயத்தில் உதவி பெறும்படியான புண்ணியம் நமக்கிருப்பதாய்த் தோன்றவில்லை. அத்தகைய விஷயத்தில் முயற்சி யெடுத்துக்கொண்டு நாம் ஜெயமடைவது காருண்யம் பொருந்திய நமது துரைத்தனத்தாருக்கு திருப்தியாயிருக்குமோ என்பதே நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தில் நாமே முயற்சி யெடுத்துக்கொண்டு பாடுபட்டால்தான் க்ஷேமமடையலாம் என்பது நன்றாய்த் தெரிகிறது.

வித்வான்கள் வறுமை, பொறாமை, செருக்குடையவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. முதல் அம்சம் சாதாரணமாய்ப் பெரும்பாலாரிடம் இருப்பது பண்டைக்காலமுதல் அனுபவமே. ஆனால், தான் வித்வான் என்று பிரசித்தி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு பாஷைக் கல்வி மட்டும் கற்றுள்ளவரிடமே பொறாமையும் செருக்குமிருக்கும். "கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோ காணே" என்று ஆன்றோர் கூறியபடி மெய்யறிவைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு கல்வி கற்றவர்களிடம் அப்பேய்கள் தலைகாட்டா.

நிற்க, மேலே கூறியபடி சாஸ்திரங்களை நம் தாய்ப்பாஷையில் மொழிபெயர்க்கும் வேலை ஆங்கிலம் தமிழ் இரண்டும் கற்றவர்களாலேயே ஆகவேண்டும். அத்தகையோரில் பெரும்பாலர் தமிழை யிழிவாகவும் அலக்ஷியமாகவும் கருதுவோரே. அவர்களுக்கு மேற்படி காரியத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணமும் சிந்தையும் உண்டாவது அரிதினுமரிதே. மனிதசுபாவத்தின்படி, அவசியமென்று தோன்றி அக்கரை யேற்பட்டால்தான் ஒரு காரியத்தைச் செய்ய விருப்பமுண்டாகும்.

ஆங்கிலம் வாசிப்போர் இரசாயன சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் முதலியவற்றைக் கற்பது உண்மையே. ஆனால் அக்கல்வியைப் பரீட்சை நடக்குமிடத்திலேயே ஒப்பித்துக் கைகழுவி விடுகிறார்கள். பின்னால் அவற்றைப்பற்றி சிந்திக்கவேண்டிய அவசியமே அவர்களுக்கில்லை. ஏனெனில் மாணவராக விருக்கும்போதிருந்து, வாசிப்பு முடிந்ததும் நாம் துரைத்தனத்தில் ஒரு உத்தியோகம் பெறவேண்டுமென்ற ஒரு நோக்கமே அவர்கள் மனதில் வேரூன்றி யிருக்கிறது. சிறு வயதிலேயே அந்த இழிவான நோக்கம் பெற்றோராலும் மற்றோராலும் அவர்கள் மனதில் ஊட்டப்படுகிறது. அத்தொழிலுக்கு அவர்களுக்கு அனுபவத்தில் வேண்டுவது ஆங்கிலபாஷாஞானமும், கொஞ்சம் கணிதமுமே.

கலாசாலையில் மேற்கண்ட சாத்திரங்களைக் கற்றுப் பட்டம்பெற்ற ஒருவன் விவசாயத் தொழிலைச் செய்ய முன்வருவானேல், மேற்படி சாத்திரக்கல்வியின் அனுபவத்தை யுபயோகப்படுத்தவேண்டிய அவசியம் அவனுக்கேற்படும். இரசாயன சாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்கள் கற்றிருப்பதால் இன்னவிதமான எருவை யுண்டாக்கி இன்ன பூமிக்கு உபயோகித்தால் அதிக பலன் தரும் என்றுணர்ந்து அவ்வாறே செய்வான். தன் தாபர சாஸ்திர அறிவைக்கொண்டு நஞ்செய்ப் பயிர்களையும் தோட்டப் பயிர்களையும் உன்னத நிலைமைக்குக் கொண்டுவருவான். தன் யந்திர சாஸ்திர ஆராய்ச்சியைக்கொண்டு விவசாயத்திற்கு வேண்டிய நூதன விதமான கருவிகளைச் செய்வான்.

அப்படிப்பட்டவனுக்கு இந்தச் சாஸ்திரங்களை நம் தாய்ப்பாஷையில் மொழிபெயர்த்து நம் நாட்டாருக்குப் போதிக்கவேண்டும் என்ற அக்கறை தானேயுண்டாகும். ஏனெனில் நம் ஒருவனுக்கு மட்டும் இவை தெரிந்திருப்பதால் யாவற்றையும் நாமே செய்யவேண்டியதாயிருக்கிறது; பலர்க்கும் தெரிந்திருந்தால் சுலபமாய் வேலைகள் நடக்கும் என்பதை யவன் உணர்வான். அப்படிக்கின்றி ஆங்கிலங் கற்போரனைவரும் அதமத்தொழிலாகிய சேவகா விர்த்தியிலேயே நாட்டம் வைத்திருக்கும் வரையில் நாம் க்ஷேமமடைவது முயற்கொம்பே.

பெற்றோர் இனியேனும் தம் மக்களுக்கு சேவகத் தொழிலின் அடிமைத் தன்மையையும், அதிலுள்ள கஷ்டங்களையும், இழிவையும் நன்கு விளக்கிக் காட்டவேண்டும். சுயாதீனமான விவசாயம், வர்த்தகம், நெசவு முதலிய கைத்தொழில் இவற்றின் கௌரவத்தையும், அவைகளே செல்வத்தையும் பலத்தையும் அளிக்கத்தக்கவை யென்ற உண்மையையும் அவர்களுக்கு நன்றாகப் போதித்து அந்த வழியில் ஜீவனம் செய்யும்படி அவர்களைத் தூண்டவேண்டும்.

நமது நாட்டில் இன்னொரு அறியாமை யிருக்கிறது. வர்த்தகர் முதலிய செல்வவந்தர்களின் புத்திரர்கள் பெரும்பாலும் கல்வியற்றவர்களாகவும், தாய்நாட்டிற்கு ஒரு நன்மையும் செய்யாதவர்களாகவுமே யிருக்கிறார்

கள். அத்தகையோர் ஜீவனத்திற்காக கல்வி கற்கவேண்டிய அவசிய மில்லை என்ற காரணத்தைக் கூறியே கல்வியை யலட்சியம் செய்வதை யொருபெருமையாய்க் கருதுகிறார்கள். பெற்றோரும் "என்மகன், இருக்கும் சொத்தை வைத்துக்கொண்டு வட்டியைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் போதும். அவன் படிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்" என்று பெருமையாய்க் கூறுகிறார்கள்.

உண்மையில் அவர்களே ஒரு கவலையுமின்றி நன்றாய்க் கல்விகற்று விவசாயத்தைச் சீர்திருத்தத்தோடு நடக்கச்செய்தும், தொழிற்சாலைகளைத் தாபித்து நம் நாட்டார்க்குப் பல்வகைத் தொழில்களைக் கற்றுக்கொடுத்தும், தாங்கள் திரண்ட செல்வம் பெறுவதோடு தாய்நாட்டிற்கு க்ஷேமத்தை யுண்டாக்கி இம்மையில் அழியாப் புகழையும், மறுமையில் பெரும் புண்ணியப் பயனையும் அடையவேண்டும்.

இவ்வுலகிலுள்ள கோடீஸ்வரர்களில் முதன்மை பெற்றவர்களில் ஒருவராகிய ஜான்-டி-ராக்பெல்லர் என்பவருடைய பேரனாகிய காட்பிரே என்பவர் ஏன் வேலைசெய்யவேண்டும்? அப்படி யிருந்தும் அந்த இளைஞர் தற்காலம் அமெரிக்காவிலுள்ள ஒரு பாங்கியில் சொற்ப சம்பளத்தில் வேலைக் கமர்ந்திருக்கிறார். ஏன்? செல்வமிருப்பினும் நாம் ஒரு தொழிலைப் பூரணமாகக் கற்று அவ்வழியில் நாமே சம்பாதிக்கவேண்டும் என்ற கருத்து கொண்டே அப்படிச் செய்கிறார். அவர் பூரணமாக வேலை கற்றுப் பிறகு தாம் ஒரு பாங்கியை ஸ்தாபித்துத் தம் முன்னோரினும் சிறப்பாக அதை நடத்திப் பிரசித்தி பெறுவார். மேல்நாட்டுச் செல்வவந்தரின் மக்கள்மட்டுமல்ல, அரசர்கள், சக்கிரவர்த்திகளின் பிள்ளைகள்கூடச் சிறு வயதிலேயே ஒவ்வொரு தொழிலில் பிரவேசித்து அதில் தேர்ச்சியடைகிறார்கள். அவர்கள் அவ்வாறு அறிவாளிகளாக நடந்துகொள்வதால்தான் உன்னத நிலைமையி லிருக்கிறார்கள்.

நமது நாட்டார் அவர்களைப் பின்பற்றி நடந்தால் நம் நாடும் சீக்கிரத்தில் மேன்மைபெறும். நம்மவரோ, நமக்கு அனாவசியமும் தகாதனவுமாகிய விஷயங்களில் மட்டும் மேல்நாட்டாரைப் பின்பற்றி நடக்க ஆவலுள்ளவர்களாக விருக்கின்றனர். இது நம் நாட்டின் கெட்டகாலக் கொடுமையோ அல்லது நமது அறியாமையோ அறியோம். எல்லாம்வல்ல பரம்பொருளாகிய கருணாநிதியே நமக்கு நல்லறிவு புகட்டி நல்வழி காட்டவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

பகவத்கீதை வசனம்.

(313-ம் பக்கத் தொடர்ச்சி.)

"ஏ! அர்ச்சுனா! மின்னலைப்போன்று தோன்றி யழியுந்தன்மைத்தாய இம்மானுட வாழ்வில் உன்னை நீ பக்தியோடு திரிகரணங்களால் என்னையே நமஸ்கரித்து, சதா என்னையே சிந்திப்பாயாகில் நித்தியானந்த சொரூபியாகிய என்னையே யடைவாய்" என்று பகவான் அருளிச் செய்தார்.

[எவன் உலக சம்பந்தமான எந்த வஸ்துவிலும் மனம் பற்றாதவனும், அதாவது நிராசை யுடையவனும் ஈசுவரனுடைய நிஜ சொரூபத்தில் பக்தி யுடையவனுமாய்ச் சதா அவனையே திரிகரண சுத்தியோடு சிந்தித்துக்கொண் டிருக்கிறானோ அவன் முடிவில் பரமானந்த சொரூபியாகிய அப்பகவானையேயடைகிறான். எவ்வாறெனின், நதிகளெல்லாம் கடலை நோக்கிச் சென்று முடிவில் தமது நாமம் உருவம் யாவும் ஒழிந்து கடலிற் கலந்து கடலே யாவதுபோல ஆன்மாவும் பிரம்ம சொரூபத்தை யடைகிறது.]

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.



10-வது விபூதியோகவத்தியாயம்.

(ஏழு, எட்டு, ஒன்பதாம் அத்தியாயங்களில் பகவான் தத்பதார்த்த வடிவனான பரமேஸ்வரனது சோபாதிக நிருபாதிக சொரூபங்களைக்காண் பித்தனர். அவற்றில் ஒன்று தியானத்திற்கு மார்க்கம்; மற்றொன்று ஞான மடையும் மார்க்கமாகும். அத்தகைய பரமேஸ்வரனுடைய *விபூதிகள் ஏழாவது, ஒன்பதாவது அத்தியாயங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டன. அவற்றை விரித்துக் கூறவே பகவான் இப்பத்தாவது அத்தியாயத்தை ஆரம்பித் தருளுகின்றார். கருணாநிதியாகிய பகவான் அர்ச்சுனன் வினவாமலே அவனுக்கு அருளிச் செய்கின்றார்.)

நான்மறை யுச்சியில் நடனம்புரியும் கார்வண்ணனாகிய பகவான் பார்த்தனை நோக்கி, "ஏ அர்ச்சுனா! முன்பு எனது பிரபாவங்களைச் சுருக்கமாகக் கூறினேன். அவற்றைக் கேட்ட உன் மனதில் களியிரும்படி அன்பனாகிய உனக்கு மீண்டும் அதை விவரமாகக் கூறுகிறேன் கேட்பாயாக" என்று அருளிச்செய்தனர்.

(பரமேசுவரராகிய தங்கள் பிரபாவங்களை எனக்கு உபதேசிக்கத் தக்கவர்கள் இந்திரன், மகரிஷிகள் முதலியவர்கள் இருக்கையில் அதைத் தாங்களே என் உபதேசிக்கவேண்டுமென்று அர்ச்சுனனுக்கெழும் சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டி பகவான் பின்வருமாறு அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! இந்திரன் முதலிய தேவர்களும் பிருகு முதலிய ரிஷிகளும், அசுரரும், சித்தர்களும் ஆகிய யாவரும் எனது பிரபாவத்தை யுணரார்கள். ஏனெனில் தேவர் முதலிய அனைவர்க்கும் நான் காரணனாக விருக்கிறேன். அவர்களுடைய புத்தியாதிகளைப் பிரவர்த்திப்பிக்கும் காரணன் நானாகவிருக்கிறேன். அவர்களனைவரும் என் காரியங்கள். ஆகையால் என் பெருமைகளை யவர்கள் உணருகின்றார்களில்லை. மரணமும் பிறப்புமில்லாத என்னை யறியத்தக்கவர்கள் சகல பாவகர்மங்களையும் அறவே விடுத்து நிரதிசயானந்தமாகிய முத்தியை யடையாநிற்பர்.

---

* விபூதிகள்=விசேஷ குணங்கள், ஐசுவரியங்கள்.

புத்தி (அந்தக்கரணங்களின் தொழில்,) பொறுமை, தவம், ஞானம், புகழ்ச்சி, அபகீர்த்தி, ஜீவ இம்சை செய்யாமை, சத்தியம், சமை (உட்கரணங்களை யடக்கல்,) தமை (புறக்கரணங்களை யடக்கல்,) ஜபம், தானம், மரணம், பிறப்பு, பிராரப்த வசத்தால் கிடைத்ததுகொண்டு திருப்தியடைதல், சுகம், துக்கம், பயம், பயமில்லாமை இவை யாவும் என்னிடத்தினின்றே உண்டாகின்றன வென்பதை நீயறிவாயாக.

எவ்வகைப்பட்ட தவங்களை யுடைய ரிஷிகளும், ஸ்தாவர சங்கம ரூபமாகிய சகல உலகங்களையும் உண்டாக்கிய (சுவாயம்பு முதலிய பதினான்கு) மநுக்களும், ஜனகர், ஜநத்குமாரர், ஜனந்தனர், ஜநாதனர் ஆகிய நான்கு மகரிஷிகளும், எனது சங்கற்பமாத்திரத்தால் உதித்தவர்கள் என்று அறிவாயாக.

இவ்வாறு என்னையுள்ளபடி யறிந்த அறிவாளிகள் என்னிடம் தங்கள் பிராணனோடு சித்தத்தை அர்ப்பணம் செய்வார்கள். அவர்கள் தங்கள் மாணுக்கர்களையும் அவ்வாறே செய்யும்படி செய்வார்கள். சதா என்னைப் பற்றியே போதியா நிற்பர்; என்னைப்பற்றிய சம்பாஷணையிலேயே சந்தோஷமடைவர்; அதிலேயே இன்புற்றிருப்பர்.

(இவ்வாறு தமது பிரபாவத்தை யறிந்து பஜிக்கும் அன்பர்கள் அடையும் பயனை பகவானருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! இவ்வாறு என்னைச் சதா சிந்திக்கும் அத்தகைய பக்தர்களுக்கு நான் கூறிய அந்த ஞான யோகத்தை யுண்டாக்குவேன். அதனாலவர்கள் என்னைத் தமதான்ம வடிவமா யடைவார்கள். நான் அவர்களது துன்பத்தைப்போக்கி, அவர்கள் எனது உண்மைச் சொரூபத்தை யாராய்ந்தறியும் புத்தியை யளித்து, அவர்களது அஞ்ஞானத்தாலுண்டான ஆவரண இருளை ஞான வொளியால் நாசமாக்குவிப்பேன்.

(இவ்வாறு பகவான் கூறியவற்றைச் சாமான்யமாய்க்கேட்ட அர்ச்சுனன், அதைமீண்டும் விசேடமாகக் கேட்க ஆவல்கொண்டவனாய்ப் பகவானைத் துதிக்கிறான்.)

ஏ பரந்தாமா! பிறப்பிறப்பற்றவன், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் விபு, பேரானந்த சொரூபி, சர்வ ஜகத்திற்கும் காரணனான ஆதிதேவன், பரப்பிரம்மம், நாசமற்றவன், வேதங்களுக்கெட்டாதவன், யாவற்றையும் பிறப்பிப்பவன் என்று மெய்ஞ்ஞானிகளாகிய மகரிஷிகள் அருளிச் செய்தவனைத்தையும் தாங்களே எனக்கருளிச் செய்தீர்கள். சர்வ பூதங்கட்கும் ஒப்பற்ற காரணனே! சர்வ ஜனங்கட்கும் ஈசுவரனே! தேவர்கட்கும், உலகங்களுக்கும் இறைவனே! "என்னை நானே அறிவித்தாலல்லது ஒருவரும் அறியார்கள். என்னை நானே யறிவேன்" என்ற வாக்கியங்களிலுள்ள பொருள்க ளனைத்தும் சத்தியமே யாகும். யானும் அந்த உண்மையை யறிந்து சந்தேக மொழிந்தேன்.

[“அவனருளாலே யவன்றாள் வணங்கி” என்று மணிவாசகப்பெருமான் அருளியபடி ஈசுவரன் கருணைகூர்ந்து தன்னை யறிவித்தாலன்றி அவனை அறிய வொண்ணாது. அப்பர் சுவாமிகளும் “(உம்மைக்) காண்பாரார் கண்ணுதலே (நீர்) காட்டாக்காலே” என்றருளினர். தாயுமான சுவாமிகளும் “அதன் பெருமை யெவர்க்கார் சொல்வார், அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்” என்றருளினர். இதனானே முத்தியடைவதற்குப் பக்தி இன்றியமையாததென உணரக்கிடக்கிறது. பக்தியாலேயே ஈசுவரனது அருளைப் பெறலாகும்.]

ஏ பரந்தாமா! பற்பலவிதமாக உள்ள இந்தப் பிரபஞ்சத்தின்கண்ணே எத்தகைய உருவங்கள் மெய்யான தன்மையினையுடைய தங்கள் சொரூபங்கள் என்பதை அடியேன் அறிந்திலேன். அத்தகைய தங்கள் சர்வ விபூதிகளையும் தங்களையே தஞ்சமென நம்பிய அடியேனுக்கு உபதேசித்தருளப் பிரார்த்திக்கிறேன். தங்கள் பிரபாவங்களாகிய உபதேசவமிர்தத்தைப் பருகும் எனக்கு ஒருபோதும் திருப்தியுண்டாகிறதில்லை. ஆகையால் அடியேனுக்கவற்றைப் பூரணமாக உபதேசித்தருளல் வேண்டும். என்று இவ்வாறு பிரார்த்திக்கும் அர்ச்சுனனுக்கு முக்காலங்களிலும் வளர்தலும் குறைதலுமின்றி என்றும் ஒரே சச்சிதானந்த சொரூபியாய் விளங்கும் பகவான் பின்வருமாறு அருளிச் செய்கின்றார்:— (தொடரும்)

சீடன்.

ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்.

போற்றுகின்ற சோதிடநூல் பொய்யா தொருநாளுஞ்
சாற்றலறி யாதவர்க் கதுபொய் — தேர்ச்சியுள
வாசானைத் தேடி யவர்பதத்திற் றொண்டு செய்து
பேசானைப் போலே பிழை.

என்பறடி நம் தாய்நாட்டில் வசிக்கும் ஞானயோக பக்தி விசுவாசரா யிருக்கப்பட்ட சோதிட பண்டிதர்களுக்கு அறிவிப்பது என்னவெனில்:— திருக்கணிதம் இல்லாத பஞ்சாங்கத்தைக்கொண்டு ஜாதகம், குறிப்பு, ஆருடம், கோசாரம்—இவைகளைக் கணித்து பலன் சொல்லுவதால், பலாபலன்கள் ஒத்துவராத காரணம் என்னவெனில்—சாதாரண பஞ்சாங்கங்களில் நக்ஷத்திரங்களும் கிரஹசாரங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதால், பலன்கள் ஒத்து வருகிறதில்லை. அதினால் ஜனங்களுக்குச் சோதிடமென்பதே அவநம்பிக்கையாய் அனேகர் நிவர்த்திசெய்து இருக்கின்றதும் தவிர, சாஸ்திரங்கள் தினே தினே க்ஷீணித்து வருகின்றன. ஆகையால், அடியேன் இருபது வருஷகாலமாய் அனேக பஞ்சாங்கங்களைச் சோதித்தும் மேல்கண்டபடி பலன்கள் ஒத்துவராமலே இருந்தன. இப்போது மூன்று வருஷகாலமாய் ஆனந்தபோதினி சுத்த வாக்கியத் திருக்கணித பஞ்சாங்கத்தைக்கொண்டு அனுபவித்து வருவதால் சகல பலன்களும் ஒற்றுமையாய் வருகின்றன. ஜனங்களுக்கும் அதிக சந்தோஷமாயிருக்கிறது. ஆகையால் நம் தாய் நாட்டில் இருக்கப்பட்ட சகல சோதிடர்களும் மேல்கண்ட ஆனந்தபோதினி திருக்கணித பஞ்சாங்கத்தைக் கையாண்டு வருவீர்களாகில் சகல ஜனங்களுக்கும் சோதிட விஷயத்தைப் பற்றி மனதிற்கு ஆனந்தத்தை யுண்டாக்கும். இந்தப் பஞ்சாங்ககணிதம் சாஸ்திரவாதிகளுக்கு மிக்க அநுகூலமா யிருக்கின்றது.

வே. நா. முனிசாமி முதலியார்,
ஸ்ரீ சுப்ரமண்ணிய பராக்கிரம ஜோதிஷ வயித்தியசாலை, பெங்களூர் பேட்டை.

ஓர் புது சஞ்சிகை.

[சகோதர சகோதரிகாள்! முக்கியமாய் ஹிந்துக்களா யுள்ளோர் இதைக் கவனமாய் வாசிக்கக் கோருகிறோம்.]

“கிறிஸ்தவ பிரபல்ய போதினி”

என்ற மாதாந்தச் சஞ்சிகை யொன்று நமக்கு அனுப்பப் பெற்றோம். இது 1924ளு ஜனவரிமீ வெளியான 2-ம் பகுதிச் சஞ்சிகை. இத்தகைய சஞ்சிகை யொன்று சென்னையைச் சேர்ந்த இராயபுரத்தில் தோன்றி யிருக்கிறதென்று நாம் அறியச் செய்ததற்காக, நமக்கிதை யனுப்பியவருக்கு மனமார்ந்த வந்தனமளிக்கிறோம்.

இச் சஞ்சிகை கிறிஸ்தவ மதத்திலுள்ள விசேஷங்களை வெளியிடுவதோடு நிற்காது, இந்துமதத்தைக் குறை கூறுவதும் தூஷிப்பதுமே தன்னோக்கமாகக் கொண்டிருக்கிறது. “ஏசுகிருஸ்துவையே கடவுளாகக்கருதி அவரையே பக்தி செய்தால்தான் முத்தியடையலாம்” என்றும், “கிருஸ்து மதம் மட்டுமே கடவுளின் பிதாத்தன்மையைத் தெரிந்துகொண் டிருக்கிறதென்றும், இந்து மார்க்கமுங்கூட அவ்வாறு தெரிந்துகொள்ளவில்லை” யென்றும் கூறி யிருப்பதோடு, பகவானுடைய கிருஷ்ணவதாரத்தையும், விக்கிரகாராதனையையும், காசி, இராமேச்சுரம் முதலிய புண்ய க்ஷேத்திரங்களையும், புண்ணிய தீர்த்தங்களையும் இழிவுபடுத்திக் கூறியிருக்கிறது.

நேயர்களே! இது இவர்களுக்கு இயற்கையாக விருக்கிறது. இவர்கள் மதத்தின் முழுகொள்கையும் சேர்ந்து பின் வருவதில் அடங்கி யிருக்கிறது. அதாவது:—

“ஏசுவை நம்பி அவர் மூலமாகப் பாபவிமோசனம் பெற்றால்தான் முத்தி பெறலாம். அவர் நமது பாபங்களை யெல்லாம் மன்னித்து விடுவார். குருவிடம் நாம் செய்த பாபங்களைக் கூறி மனத்தாபப்பட்டால் அவர் ஏசு மூலமாய் பாபமன்னிப் பளித்துவிடுவார். இறந்தவர்களெல்லாம் புதைக்கப்படுவார்கள். ஒரு நாளைக்கு ஆண்டவன் வானத்திலிருந்து இறங்கி யாவரையும் எழுப்புவார். யாரார் கிருஸ்து மார்க்கத்தில் சேர்ந்து மரித்திருக்கிறார்களோ அவர்களெல்லாம் என்று மழியாத மோட்சத்திற்கு அனுப்பப்படுவார்கள். மற்ற பேரெல்லாம் என்று மொழியாத அக்னிச் சுவாலையாகிய கொடிய நித்திய நரகில் தள்ளப்படுவார்கள்” என்பதே. மற்றவை யாவும் பத்து கட்டளைகள் சம்பந்தமான புத்திமதிகளும் நீதிகளுமே.

பிரத்தியக்ஷ அனுபவமாய் நமது மதத்தில் கூறப்படாத எந்த விஷயமும் அவர்கள் வேதமாகிய பைபிளில் இல்லையாதலின், அவர்கள் மதப்பிரசாரம் அந்நியமத தூஷணையாகவே யிருக்கிறது. அவர்கள் கூறும் மோக்ஷம் அதிக கஷ்டமின்றி இச்சன்மத்தோடு கைகூடுவதென்று கூறப்படுவதால் ஆன்ம விசாரணை செய்யக்கூடிய அறிவு வல்லமை யில்லாப் பாமரர்களுககு அது சுலபமான வழியாகத் தெரிகிறது. கிருஸ்து மதத்தில் சேராதவர்களெல்லாம் நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்களென்ற விஷயம் உண்மையா என்பது அறிவாளிகள் சுலபமாக அறியத்தக்கது. அது விஷயமாய், கடவுள், அவ்வளவு குரூரமானவரா என்றும், ‘உன் விரோதியையும் நேசி,’ ‘ஒருவன் உன் வலது கன்னத்தி லடித்தால் அவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு’ என்று கூறிய பரமசாதுவின் வாக்கினின்றும் இது வந்திருக்குமா? என்பது முதலான பல கேள்விகள் கிளம்ப

இடமிருக்கிறது. ஆதலின் அவர்கள் கொள்கைகளைப்பற்றி நாம் ஒன்றும் கூறாமல் நம்மவர்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டிய கடமைக்காகப் பின் வரும் விஷயங்களை மட்டும் கூறுகிறோம்.

1. நமது மதத்தில் கடவுள் இலக்ஷணம் ஆன்மலட்சணம், மோக்ஷலக்ஷணம், மூன்றும் பூரணமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் கூறப்பட்டிருப்பதற்கு மேல் இன்னும் அதிகமாய்க் கூற ஒன்றுமேயில்லை. கடவுள் தந்தை லட்சண மட்டுமல்ல தாயின் லட்சணமுமுடையவரென்றும், அவர் தாயாகவும், தந்தையாகவும், எஜமானாகவும், தோழனாகவும் பாவிக்கப்படலாமென்றும் நமது நூல்களில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. தந்தையினும் தாயே சிறந்தவள் என்பது வெளிப்படையாக யாவருமறிந்த விஷயம். காரணம் இதே சஞ்சிகையில் 330-31ம் பக்கங்களில் பார்த்தால் விளங்கும். “அம்மையே அப்பா!” என்றே நம் முன்னோர் கூறியிருக்கின்றனர். நமது மதத்தில் கடவுள் கருணையே யுருவானவர் என்ற உண்மை நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. அவருக்கு ஒருவர் மேல் விருப்பும், ஒருவர்மேல் வெறுப்பும் ஒருபோதுமில்லை. அவர் தம் மதம் என்று ஒன்றையுடையவரல்ல. மதாதீதர். ஆகையால் ஒரு மதத்தினரைமட்டும் மோக்ஷத்திற்கனுப்பி மற்ற மதத்தினரை நித்திய நரகிற் றள்ளுகிறார் என்றால் அவர் ஒருபோதும் கருணையுடையவராகார். கடவுளுமாகார். சாதாரண மனிதரிலேயே தன் விரோதிக்கும், தனக்குத் தீங்கு செய்கிறவனுக்கும் தீங்கிழைக்காது நன்மையே செய்கிறவர்கள் மகா உத்தமரெனவும் சாதுக்கள் எனவும் கருதப்படுகிறார்கள். தந்தையானவன் தன் புத்திரர்களில் அயோக்கியனையும் கண்டித்துத் தண்டித்து நல்வழிக்குத் திருப்பி அவன் க்ஷேமமடையவே விழைவான்.

கடவுளும் அவ்வாறே செய்கிறார். துஷ்டர்களை, தன்னைத் தூஷிப்பவனையும், கருணையோடேயே தண்டித்துக் கடைசியில் அவனையும் தம்மிடம் சேர்த்துக்கொள்வார். அவ்வாறு காட்டும் கருணைக்கு மறக்கருணை யென்று பெயர். ஏனெனில் அவர் செய்யும் தண்டனையும் அவனை மோட்சத்திற்குப் பாத்திரவானாக்க வேண்டுமென்ற கருணையாலேயே செய்வதாகும். நல்லோர்க்கு நன்மையே யளித்து அந்தியத்தில் முத்தியளிக்கும் கருணைக்கு அறக்கருணை யென்று பெயர். பகவான், பூர்வத்தில் செய்த சொற்ப கருமத்தால் நெறி தவறுவோர்களையும் தடுத்து அவர்களைத் தம் பக்தர்களாகத் திரும்பும்படி செய்கிறார். புறச்சமயத்தில் சேர்ந்திருந்த அப்பர் சுவாமிகளை யவ்வாறே திருப்பியருளினார். இன்னும் இதற்குப் பல திருட்டாந்தங்களுண்டு. விரிக்கிற் பெருகும். அவ்வாறு தடுத்தாட்கொள்ளச் சக்தியில்லாதவரா யிருந்தால் அவர் சர்வ வல்லவராகமாட்டார்.

தாமே எல்லா மதத்தினரையும் சிருட்டிப்பவரா யிருக்கச் சிலரை மோக்ஷத்திலும் சிலரை மீளா நரகிலும் தள்ளுவாரெனில் அவர் கருணையுடையவராகவேமாட்டார். மனிதர் பிறப்பது தம்மிஷ்டப்படியல்ல. அப்படி யிருக்க தமக்கு விருப்பமல்லாத மதத்தில் மனிதரை யேன் படைக்கவேண்டும்?

முடிவில் ஒருவிதமான குறையும் கூறவொண்ணாதபடி கடவுள் லட்சணம் நமது மார்க்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

2. நமது மதத்தில் கூறப்பட்ட மோக்ஷம் செத்தபிறகு வருமென்று எதிர் பார்ப்பதல்ல. தன் ஆன்மாவையே யித்தகையதென அறியாதவன் கடவுளை யெப்படி யறிவான்? ஒருபோதுமறியான். ஆன்மாவை யறியும்

மார்க்கமும் (யோகம்), கடவுளை யறிந்து அவரோடு சேர்ந்துகொள்ளும் மார்க்கமும் (ஞானம்) நமது மதத்தில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இத்தேகத்தி லிருக்கும்போதே யந்த அனுபவங்களைப் பிரத்தியட்சமாய் அங்கை நெல்லிபோல் அறியலாம். நம் முன்னோராகிய மகான்கள் அவ்வாறறிந்தே அவற்றினுண்மையை வெளியிட்டிருக்கின்றனர். இப்போதும் அத்தகையோர் உளர்.

சகோதர சகோதரிகளே! இத்தகைய அழியாத உண்மைகளை யுடைய மதத்தில் புண்ணிய வசத்தால் ஜனித்தும் சுயமதக்கல்வி யில்லாததால் புறச்சமயத்தாரின் மாயவலையிற் சிக்கி, உலக இன்பங்களில் ஆசை வைத்து, நமது உத்தமமதத்தைக் கைவிடுவது பெரும் பாதகச் செயலன்றோ. நம்மதத்தைக் குறை கூறித் தூஷித்து, பொருள், உத்தியோகம், அந்தஸ்து முதலிய உலக ஆசைகளைக் காட்டித் தங்கள் வலைக்குள் உங்களை யிழுக்க முயலும் புறச் சமயத்தவர்கள் பிரசங்கங்களுக்குச் செவி கொடாதீர்கள். அத்தகைய விடத்தைக் கண்டதே துரிதமாக எட்டச் செல்லுங்கள், அத்தகையபத்திரிகை சஞ்சிகைகளைக் கண்ணாலும் பாராதீர்கள். மனமாகிய மாயை சுலபத்தில் தீயவழிகளிகல் இழுத்துச் செல்லும். தீயதை நல்லதுபோல் முதலில் காட்டும். நாம் அதனால் மயங்கி அதன் வழிச்சென்று குழியில் வீழ்ந்தபின்பே உண்மை தெரியும். பிறகு என்ன பயன்? பழைய நிலைமையை யடைதல் மிக்க கஷ்டம். ஆகையால் எப்போதும் எச்சரிக்கையா யிருங்கள். நமது மக்களுக்கு ஆரம்பத்திலேயே நம் மதக்கல்வியைப் புகட்டுங்கள். கடவுளுக்கு எல்லா மதமும் ஒன்றே. எம்மதத்தில் பிறந்தாலும் அம்மதக் கொள்கைகளின்படி நடந்து ஞானநெறியைக் கைக்கொண்டால் ஆண்டவனருள் பெறலாம். குறுகிய மனமும் அறிவுங்கொண்டு "இந்த மதத்தில் மட்டுமே மோக்ஷமுண்டு. மற்றதிலில்லை" என்று கூறுவது சுத்த அஞ்ஞானமான மதவைராக்கியம் என்றே கூறப்பட்டிருக்கிறது. இதுவே எல்லாமத அறிவாளிகளின் கொள்கையும். ஆண்டவன் கருணை புரிவாராக. பத்திராதிபர்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்:—ஆ! மனோகரன் எங்கே இருக்கிறான்?

பவானி:—சடங்கு நடந்தது முதல் நான் அவனைக் காணவில்லை.

ஆனந்:—இதைப்பற்றி யவனுக்கு ஏதாவது சந்தேகமுண்டா யிருக்குமோ?

பவானி:—ஆம். அவன் கொலையாளியை யெப்படியும் வெளிக்குக் கொண்டு வரவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டிருக்கிறான். அத் துஷ்டர் சம்பாஷணையால் மனோகரன் சவத்தைக் குழியிலிருந் தெடுத்து சோதனை செய்ய முயன்றுகொண் டிருப்பதாய்த் தெரிகிறது. அதனால்தான் மலையாளி யவனைக் கொன்றுவிடவேண்டும் என்கிறான். அதைக் கேட்ட கறுப்பண்ணன் "அது அவசியமல்ல. அப்பெண்ணின் தாயாரே வந்து பார்த்தால்கூட அவள் அம்பாலிகை யல்லவென்று சந்தேகிக்கமாட்டாள். அதிலும் அத்தேகம் இப்போதிருக்கும் நிலைமையில் ஒருவரும் கண்டுபிடிக்க முடியாது" என்றான்.

பவானி கூறியதைக் கேட்டதே யானந்தலிங் துள்ளிக் குதித்தான். இப்போதுதான் விவகாரங்கள் அவனுக்குப் பிரியமான வழியில் திரும்புகின்றன. அவன் பவானியை நோக்கி,

"இச்சமயம் மனோகரன் எங்கிருப்பானென்று உன்னால் உத்தேசிக்க முடியாதா?" என்றான்.

பவானி:—"எப்படிச் சொல்வது? அவன் வாசஸ்தலம் தென்னாட்டில். ஒரு சமயம் அங்கு சென்றிருக்கிறானோ வென்னவோ!

ஆனந்:—நீ சொன்னபடி சவத்தைச் சோதிக்க முயல்கிறவனா யிருந்தால் அவன் அங்கு போய்விட் டிருக்கமாட்டான்.

பவானி:—அதுவும் சரிதான். அவன் எங்கிருக்கிறா னென்று எனக்குத் தெரியவில்லை.

இவர்களிப்படி சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் யாரோ தெருவாயிற் கதவைத் தட்டினார்கள். ஆனந்தலிங் மனதில் ஒருவித வுணர்ச்சி யுண்டாயிற்று. அவன் உடனே பவானியை நோக்கி,

"நீ யுன் முகமூடியை மூடிக்கொள். வருகிறவன் மனோகரனா யிருந்தால் உடனே யெழுந்து உள்ளே போய்விடு. அவன் சென்றபின் இங்கு வா" என்றான்.

5-வது அத்தியாயம்.

மறு நிமிடம் ஒரு ஆள் அறைக்குள் வந்தான். ஆனந்தலிங் அவனைக் கண்டதே அவன் மனோகரனென்று தெரிந்துகொண்டான். பவானியும் உடனே யெழுந்து உள்ளே போய்விட்டாள்.

மனோகரன்:—அந்த ஸ்திரீ யார்?

ஆனந்:—முன்னே நீ யாரென்பதைக் கூறு.

மனோ:—அப்படியானால் நீ யென்னை யாரென்று தெரிந்துகொள்ளவில்லையோ?

ஆனந்த:—நான் உன்னை முன்னே பார்த்திருக்கிறேனா.

மனோகரன் புன்னகையோடு "நீ துப்பறிபவனாதலால் எதிலும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டியதுதான். நான் அம்பாலிகையின் சவச்சடங்கில் உன்னைக்கண்டேன். உன்னால் நான் உத்தேசித்தபடி ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிட நேர்ந்தது. அப்போது நீ மாறுவேட மணிந்திருந்தாலும் இப்போது நான் நீயே யானந்தலிங்கென்று தெரிந்துகொண்டேன்.

ஆனந்:—அப்படி யாயின் நீ மனோகரனா?

மனோகரன்.—ஆம்.

ஆனந்:—நீ என்ன சந்தர்ப்பமாய் என்னிடம் வந்தாய்?

மனோகரன்:—முதல்தரமான பிரக்யாதிபெற்ற ஒரு துப்பறிபவன் வேண்டுமென்று விசாரித்தேன். கடைசியில் இந்த விலாசத்தைக் கூறினார்கள். உண்மையில் யாரென்று எனக்குத் தெரியாது. இந்த அறைக்குள் நுழைந்ததே தெரிந்துகொண்டேன்.

ஆனந்:—நீ என்ன காரியமாய் என்னிடம் வந்தாய்?

மனோ:—நீ முன்னமே இக்குற்றத்தில் ஒரு கட்சியில் சேர்ந்திருக்கிறாய் என்று நினைக்கிறேன்.

ஆனந்:—எந்த குற்றத்தில்?

மனோ:—கருப்பண்ணன் சம்பந்தமாகிய குற்றத்தில்.

ஆனந்:—நான் உண்மையை மனம்விட்டுக் கூறுகிறேன். கொலை செய்தவனைக் கண்டு பிடிக்கும்படியாய் நான் அவனால் அமர்த்தப்பட்டிருக்கிறேன்.

மனோ:—அப்படியானால் நீ குற்றவாளியை யதிகதூரம் தேடிச் செல்ல வேண்டியதில்லை. உன்னை யமர்த்தியவனே கொலை பாதகன்.

ஆன:—நானும் முதலில் அப்படியே யுத்தேசித்தேன். பின்னால் நடந்த சம்பவங்களால் எனக்குச் சந்தேகம் உண்டாய்விட்டிருக்கிறது.

மனோ:—ஓகோ! அப்படியாயின் அவன் உன் கண்ணிலும் மண்ணைத் தூற்றிவிட்டிருக்கிறான். நீ யவனை விட்டுவிட்டு என் கட்சியில் வந்துவிடு. மிக்க சுலபமாய்க் குற்றவாளியைக் கண்டு பிடிக்க சுலபமான ருசுவுகளைக் கொடுக்கிறேன்.

ஆனந்:—"நான் முன்னமே யுன் கட்சியில்தான் வேலை செய்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதே மனோகரன் மிக்க வியப்படைந்து "என் பட்சத்தில் வேலை செய்கிறாயா? எப்படி?" என்றான்.

ஆனந்:—அதை விவரமாய் இப்போது கூறமுடியாது. ஒன்று மட்டும் கூறுகிறேன். நான் மெய்யான குற்றவாளியைப் பின்பற்றி யிருக்கிறேன். எப்படியும் அவனை விடாமல் பிடித்தே தீருவேன்.

மனோகரன்:—முதலாவது சவத்தை யெடுத்து சோதிக்க வேண்டும்.

ஆனந்:—ஆம்! அது அவசியம்தான். ஆனால் மிக்க துக்ககரமான சம்பவம். தெய்வ சங்கல்பமாய் அது நமக்கு அனாவசியம்.

மனோ:—அப்படியானால் முன்னாடியே அதற்கு சேகரித்துக்கொண்டாயோ?

ஆனந்:—நான் மிக்க ஆச்சரியமான ஒரு சம்பவத்தைக் கண்டு பிடிக்கும் சமயத்திலிருக்கிறேன். ஆனால் நீ மட்டும் எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும்.

மனோ:—அது இன்னதென்று மட்டும் கூறிவிட்டால் உடனே செய்கிறேன்.

ஆனந்:—நீ இந்த விஷயத்தில் என்னை யறியாமல் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாதே. முழுவிஷயத்தையும் என் பொறுப்பில் விட்டு நீ மிக்க ஜாக்ரதையாய் எங்காவது ஒளிந்துகொண்டிருக்கவேண்டும்.

மனோ:—ஏன்?

ஆனந்:—அத்துஷ்டர்கள் உன்னைக் கொன்றுவிடத் தீர்மானித்துவிட்டிருக்கிறார்கள்.

மனோ:—அவர்கள் கெட்டார்கள். நான் அதற்குப் பயந்தவனல்ல.

ஆனந்:—இருக்கட்டும். நீ நாளை காலைவரையில் மட்டும் ஒளிந்துகொண்டிரு. நான் சொன்னபடி மிக்க ஆச்சரியமான ஒரு சம்பவத்தை யுனக்கு வெளியிடுகிறேன். அதனால் உன் யோசனைகளனைத்தும் அடியோடு மாறுதலடையும். (தொடரும்)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

சந்தாநேயர்களுக்கு.

அடுத்த வருடம் முதல் சந்தா நம்பர்களைப் புதுப்பித்து எல்லா விலாசங்களையும் அச்சிடப் போவதால் இப்போது சிலர் விலாசங்கள் கையால் எழுதியனுப்பப்படுகின்றன. "என் மேல்விலாசம் அச்சடித்தனுப்பப்படாவிட்டால் அடுத்த வருடம் முதல் சஞ்சிகை வரவழைப்பதை நிறுத்திவிடுவேன்" என்று ஒரு சந்தாதார் எழுதுகிறார். ஆனந்தபோனியை வாசிக்கும் ஒருவர் இந்த அல்ப விஷயத்தை யொரு கௌரவயீனமாய் மதிப்பதைப்பற்றி மிக்க விசனிக்கிறோம். பத்திராதிபர்.

இங்கிலாந்தும் மதுபானமும்.

1922-ம் வருஷத்தில் மதுபானத்திற்காக இங்கிலாந்து தேச முழுவதிலுஞ் செலவிடப்பட்ட திரவியம் 35,41,31,000 பவுன்களாம். ஆனால் இத்தேசத்தின் ஜனத்தொகையோ 4,75,47,000. சராசரி ஆள் ஒன்றுக்கு 79 பவுனும், பருவமானவர்களைமட்டும் கணக்கெடுத்தால் ஆள் ஒன்றுக்கு 1210 பவுனும் மதுபானச் செலவாகும்.

இப்பெருந் தொகையை மனதில் கிரகிக்கும் வழி.

1922-ம் வருஷத்தில் கிரேட் பிரிட்டனில் மதுபானத்திற்காகச் செலவிடப்பட்ட திரவியங்களை ஒரு பவுன் நோட்டுகளாக மாற்றி அவற்றை ஒவ்வொன்றாக 13 வயதுள்ள ஓர் சிறுவன் எண்ணுவதாகப் பாவித்துக் கொள்வோம். ஒரு நிமிஷத்தில் 200 ஒரு பவுன் நோட்டுகளை எண்ணினால், ஒரு நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலைசெய்யும் விஷயத்தில் அவ்வளவு திரவியத்தையும் எண்ணி முடிக்குமுன் அவனுக்கு 21 வயதாகிவிடுமாம். ஆனால் ஒரு வாரத்திற்கு 6 நாளாகவும், ஒரு வருஷத்திற்கு 48 வாரங்களாகவுங் கணித்த திருஷ்டாந்தமாகும்.

கிரேட் பிரிட்டனில் 1922-ம் வருஷத்தில் செலவான பீர் பீப்பாக்களை ஒரு நீண்ட குழாய்மாதிரி அடுக்கி வைக்கும் விஷயத்தில் அந்தக் குழாய் 13,500 மைல் தூரம் செல்லுமாம்.

நாய்களின் நுண்ணறிவை விளக்கும் ஆச்சரியச் சம்பவங்கள்.

ஒரு டெரியர் ஜாதி நாய்க்குச் சொந்தக்காரர், வெளிதேசம் செல்ல வேண்டியதாக இருந்தபடியால் அந்நாயைத் தமது சிநேகிதரிடம் விட்டுச் சென்றிருந்தார். சிலகாலத்திற்கப்பால் அவர் தனது சுயதேசம் திரும்பி வந்து தனது சிநேகிதருக்குக் கடிதம் எழுதியிருந்தார். சிநேகிதர் அக்கடிதத்தை வாசிக்கையில் வேடிக்கையாக அந்நாயிடம் "உனது எஜமான் வந்துவிட்டார்" என்று சொல்லிய சற்றுநேரத்திற்குப் பின் நாயைக் காணாதபடியால் விசாரித்ததில் அதன் எஜமானனிடம் சேர்ந்திருப்பதாகத் தெரியவந்தது.

ஓர் நியு பௌந்திலாந்து நாயும் மற்றொரின் வேட்டைநாயும் கடல் பாலத்தோரம் சண்டையிட்டுக்கொண்டிருக்கையில் இரண்டும் தவறி தண்ணீரில் விழ நியுபௌந்திலாந்து நாய் நீந்திக் கரைசேர்ந்து மற்றநாய், கஷ்டப்படுவதைப் பார்த்து திரும்பவும் தண்ணீரில் மூழ்கி அந்நாயைக் கரைசேர்த்ததாம்.

விழித்தவுடன் கண்ணாடி பார்த்தலின் குணம்.

தூங்கி விழித்தவுடன் கண்ணாடி பார்க்கிறதினால் வீரிய விருத்தியும் மகிழ்ச்சியும் சர்வவசியமும் ஞானமும் அதிகரிக்கும்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

இரக்தாக்ஷிஞூ சித்திரைமீ—கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847,
பசலி 1333—கொல்லமாண்டு 1099-1100—ஹிஜரி 1342,
இங்கிலீஷ் 1924ஞூ ஏப்ரல்மீ—மேமீ

சித்திரை	ஏப்ரல்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	ஞா	நவ60	பூச48-53	சித்60	வருஷப்பிறப்பு, ஸ்ரீராம நவமி, திருதினஸ்பிருக்
2	14	திங்	நவ0-28	ஆயி51-8	சி51-8மர	நவக்கிரகசாந்தி செய்ய
3	15	செவ்	தச0-43 ஏ58-55	மக51-20	சித்60	பிரயாணம் விலக்க, ஸ்மார்த்த ஏகாதசி
4	16	புத	து55-8	பூர19-38	அமி60	வைஷ்ணவ ஏகாதசி
5	17	வியா	திர49-25	உத்45-58	ம45-58சி	பிரதோஷம்
6	18	வெ	சது42-23	அஸ்40-50	அ40-50சி	கரிநாள்
7	19	சனி	○34-18	சித்34-38	ம34-38அ	சித்திரா பௌர்ணமி
8	20	ஞா	பிர25-8	சுவா27-45	சி27-45ம	சைத்ரபகுளம்,
9	21	திங்	துதி16-18	விசா20-38	ம20-38சி	துதிகைஸ்ரார்த்தம்நாழி
10	22	செவ்	திரி7-33 சது59-20	அனு13-50	சி13-50ம	அவமாகம் [14-க்குமேல்
11	23	புத	பஞ்51-43	கேட்7-43	சித்7-43ம	
12	24	வியா	சஷ்46-18	மூல2-40 பூரா59-0	சித்60	
13	25	வெ	சப்41-53	உத்56-55	சி56-55ம	
14	26	சனி	அ39- 5	திரு56-28	சித்60	
15	27	ஞா	நவ38-3	அவி57-30	ம57-30சி	
16	28	திங்	தச38-25	சதை60	சித்60	
17	29	செவ்	ஏ40-15	சதை0-20	மர60	
18	30	புத	து43-3	பூரட்3-5	அ3-50சித்	
19	1924ஞூ மேமீ 1	வியா	திர46-50	உத்-8-38	சித்60	பிரதோஷம்
20	2	வெ	சது51-58	ரேவ-14-13	அமி60	கிருஷ்ணாங்காரசதுர்தசி
21	3	சனி	●56-33	அசு20-30	சித்60	அமாவாசை, கத்திரி ஆரம்பம்
22	4	ஞா	பிர60	பரணி27-20	சித்60	திருதினஸ்பிருக்
23	5	திங்	பிர1-38	கிரு ⁂34-33	ம34-33அ	கிருத்திகை, சந்திரதரிசனம்
24	6	செ	துதி8-20	ரோ41-58	அ41-58சி	பரசுராம ஜயந்தி
25	7	புத	திரி14-30	மிரு49-30	சித்60	திருதின ஸ்பிருக்
26	8	வியா	சது20-30	திரு56-43	ம56-43அ	பிரயாணம் விலக்கல்
27	9	வெ	பஞ்26	புன60	சித்60	சஷ்டி, வித்தியாரம்பம்
28	10	சனி	சஷ்30-35	புன3-8	சித்60	
29	11	ஞா	சப்33-48	பூச8-28	சித்60	சங்கோற்பத்தி
30	12	திங்	அ35-13	ஆயி12-13	சி12-13ம	நவக்கிரகசாந்தி செய்ய
31	13	செ	நவ34-40	மக14-5	சித்60	ரிஷபரவி நா-42-55விஷ்ணுபதி புண்யகாலம்

	சூரி புத	சுக்	
கே	15உ மிது-ச		
செ			ராகு
	குரு	சனி	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.